# ஈழகேசரி

EELAKESARI - NATIONALIST TAMIL WEEKLY

● தேசிய வார வெளியீடு   நிறுவியவர்: நா. பொன்னையா ●

மலர் 24 | சுன்னுகம், விஜய ஆடி உடு — 9-8-53 — ஞாயிறு (காந்தி ஆண்டு 84) | இதழ் 6



சாம்பசிவம் அன்ட் கோ

38, கஸ்தூரியார் வீதி : பெரியகடை : யாழ்ப்பாணம்

H. M. V. — றேடியோ, கிராமபோன், றெக்கோட்டுகள்

விற்பனைக்கிருக்கின்றன.

N. Sambasivam & Co.,

38, Kasthuriar Road : Grand Bazaar : JAFFNA


வேலை நிறுத்தப் பிரசாரம் ○ இரணைமடுப் பகுதியிற் குடியேற்றம் ○ பனைவளம் ○ மாகாண அதிபர் சமாதானம்

# வெங்காயம் செய்த வேலை

## மகா நாட்டில் வாக்குவாதம்

யாழ்ப்பாணம், 7-8-53

அங்குலக் கணக்கிலே அகலம் பார்த்துத் தரம் பிரிக்கப்பட்ட யாழ்ப்பாண வெங்காயம், கமக்காரரிடையே எவ்வளவு தூரம் பரபரப்பை உண்டாக்கிய தென்பதை அது சம்பந்தமாகக் கூட்டுறவுச் சங்கப் பதிவு காரியாலயததில் நடைபெற்ற விளைபொருட் சங்கப் பிரதிநிதிகள் மகா நாட்டிற் காணக்கூடியதா யிருந்தது. உணவு அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசியான திரு கே. ஆழ்வாப்பிள்ளை தலைமையிலே நடைபெற்ற இம் மகாநாட்டிற் சமரச ஆலோசனைக்குப் பதிலாகச்சண்டப்பிரசண்டங் கிளம்பி வாக்குவாதங்கள் நடைபெற்றன. வெங்காயத்திலே தொடங்கிய விவாதம் அரசியலிலே தொட்டுப் பிரதிநிதிகள் வெளியேறு மளவிற்கு வந்து நின்றது. பின்னல் நடக்கப்போவதை முன்னுல்உணர்ந்துபோலும் அங்கு பத்திரிகை நிருபர்கள் அனுமதிக்கப் படவில்லை. திரு ஆழ்வாப்பிள்ளையால் கமக்காரருக்குச் சாதகமான முடிவுசெய்ய முடியாமற் போய் விட்டாலும் உணவு அமைச்சர் சேர் ஒலிவரால் தரம்பிரிக்கும்முறை கைவிடப்பட்டு நடுத்தரமான விலையும் (குறைந்த 22½ சதம்) நிர்ணயிக்கப்பட்டுள்ளதாம். நிலைமை மாறுபடு முன்பே இச்செய்தி தந்தி மூலம் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டது. இந்த நல் முடிவு உண்டாவதற்கு உதவி உணவு அமைச்சர் திரு வி. குமாரசுவாமி தீவிர முயற்சி எடுத்தா ரென்ற செய்தியும் எட்டியுள்ளது.

இம்மாதம் 12-ந்திகதி நடைபெற விருக்கும் வேலைநிறுத்தம், யாழ்ப்பாணத்திலே பிரசாரம்செய்யப்பட்ட அளவுக்கு நடைபெறு மென்று எதிர்பார்ப்பதற்கில்லை. மக்களின் பொதுப் பிரச்சினைகள் அரசியல் வாதிகளின் சுய நோக்கங்களுடன் கலக்கப்பட்டு வருகின்றன வென்று இங்கு பொதுப்படையாகக் கூறப்பட்டு வருகிறது. அதுமட்டுமன்றி ஒரு சில இடதுசாரிக் கட்சியினரிடம் பூரணமான ஒற்றுமை இந்த விஷயத்தில் ஏற்பட்டதாகவும் தெரியவில்லை. ஆனல் பொலிஸ் ஏற்பாடுகள் மட்டும் தீவிரமாய்நடைபெறுகின்றன. 12-ந் திகதிக்கு முன்னரும் பின்னரும் சில தினங்கட்கு, பகிரங்கக் கூட்டங்களோ ஊர்வலங்களோ நடத்த அனுமதி வழங்கப்படமாட்ட தெனவும் 12-ந் திகதி ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்கு வரலா மெனவும் தெரிகிறது.

இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்வதில்லை யென அரசாங்க ஊழியர்கள் மறுத்து விட்டனரெனினும் ஒருசில பஸ் கொம்பனிகளின் தொழிலாளர்கள் ஒத்துழைப்பார்களெனத் தெரிகிறது. நாட்டில் வேலைநிறுத்தப் பிரசாரவேகம் குறைகிறதேயன்றிக் கூடுவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. வேலை நிறுத்தத்திற்கான நிதி சேர்ப்பதில் சம

— நமது நிருபர் —

சமாஜக் கட்சியினர் முயற்சியெடுத்து வருகின்றனர். திரு அ. துரைராசசிங்கம் எம். எம்ஸி., திரு. அ. விசுவநாதன் முதலியோர் நகரின் வீதிகள் தோறும் கடை கடையாகச் சென்று கடந்த சனிக்கிழமை பணவசூல் நடத்தினர்.

பட்டினப் பக்கத்திலே வேலை நிறுத்தம் பற்றி வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றாலும் கிராமப் புறங்களில் அது பற்றிய சிந்தனை அதிகமாய் இல்லை. அடுத்த வாரமும் கூப்பனுக்குச் சீனப் பச்சரிசிதானு அல்லது மில்சாட் கிடைக்குமா என்று எதிர் பார்ப்பதிலேயே அவர்கள் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

வேலை நிறுத்தத்தை ஆதரிப்பதாகவும் அதில் ஒத்துழைக்குமாறும் தெரிவித்து வெளி வந்திருக்கும் அறிக்கையொன்றில் யாழ்ப்பாண முன்னுள் மேயர் திரு சி. பொன்னம்பலம் தற்போதைய உபமேயர் அல்பேட் துரையப்பா, திரு சி. வன்னியசிங்கம் எம். பி., காங்கேசன்துறை பட்டின சங்கத் தலைவர் திரு எஸ். கிருபாமூர்த்தி ஆகியோரும் சில கிராமக் கமிட்டிகளின் தலைவர்களும் உட்படப் பலர் கையொப்பமிட்டுள்ளனர்.


### குடியேற்றம்

இரணைமடுப் பகுதியில திருத்தப்பட்டுள்ள முடிக்குரிய நிலத்திற் குடியேற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகி விட்டன. யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அங்கு குடியேறலாமென்று அறிவிக்கப்பட்டுள்ள செய்தியானது அனேகருக்கு மகிழ்ச்சி யூட்டுவதென்றும் இங்கு நிலமில்லாதவர்களின் பெயர் விபரமொன்றைத் தயாரிக்கும் வேலையைத் தமிழரசுக் கட்சி சமீபத்திற் தொடங்கக் கூடு மெனவும் தெரிகிறது.

### பனை விழா

பனை மகோற்சவம் ஒன்றினை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் இங்கு செய்யப்பட்டு வருகின்றன. பனைமரத்தின் பயனை மக்களிடம் உணர்த்துவதற்காக ஒக்டோபர் 2-ந் திகதி அகில இலங்கைப் பனைத்தினம் கொண்டாடப் படவிருக்கிறது. யாழ்ப்பாணம் பனம் பொருள் உற்பத்திச் சங்கத்தின் ஏற்பாடான இத்தினத்தன்று பத்தாயிரம் பனங்கொட்டைகள் நடப்படுவதுடன் பனம் பொருள் ஆராய்ச்சிக்காக ஐம்பதினுயிரம் ரூபாய் நிதியும் திரட்டப் படுமாம்.

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)



படம் திரு. க. நவரத்தினம்: உரிமை பெற்றது.

**பூப்போதிகையில் ஒருபகுதி** : மரத்திற் செதுக்கப்பட்டுள்ள இச் சித்திர வேலைப்பாடுகளைக் கலை விழாவின் முக்கிய அம்சமாக விளங்கும் சித்திரசாலையில் நேரிற் காணலாம். இது சம்பந்தமான கட்டுரை கலை விழா மலரில் வெளியாகியுள்ளது.

# கலை விழாக் காட்சிகள்

## வைத்தீசுவர வித்தியாலயத்திற் 'காணிவல்'

:: 'ஈழகேசரி' சிறப்புப் பிரதிநிதி ::

'முத்தொளிர் மாடங்களாம் எங்கும்மொய்த் தளிசூழ்மலர்ச் சோலைகளாம்' எனப் பாரதியார் பாடிய அடிகள்தாம், யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலயத்துக் கலை விழாவையுங் காணிவலையும் பார்த்தபோது உள்ளத்தினின்றும் எழுந்தன. ஆமாம், அவ்வளவு அற்புதமாக அமைந்து ஒளி வெள்ளத்தில் மிதக்கும் மாளிகைகளும் கோபுரங்களும் பார்ப்போரைப் பரவசப்படுத்திவிடுகின்றன.

பொலநறுவையிலுள்ள சிவாலயத்தின் சிற்ப வேலைப்பாடுகளை நினைவூட்டும் வகையிற் கலைவிழா வாயிலில் வானேங்கி நிற்கும் கோபுரம் சோழர் காலச் சிற்பத்தின் சிறப்பை மனக்கண்முன் அப்படியே கொணர்ந்து நிறுத்துகின்றது.

### இந்தியா

சித்திரவாயிலைக் கடந்து உள்ளே சென்றுற் சுதந்திர இந்தியாவின் வர்த்தக நிலையம் வனப்புடன் திகழ்வதைக் கண்டு மயங்கிநிற்கலாம். இந்தியாவிற் செய்யப்படும் வண்ணப் பொருள்கள் பல இங்குள. பாரத நாட்டின் எதிர்காலம் வளமுறு மென்பதை இவை உணர்த்தி வைக்கின்றன. இந்தியாவின் கலைச் சிறப்புப் பல்வேறு துறைகளிலும் மலர்ச்சி யுற்று வருவதைப் பட்டுச் சேலைகளும் சித்திர வேலைப்பாடுகள் அமைந்த வெள்ளி, பித்தளைப் பாத்திரங்களும் ஏனைய கைப்பணிவேலைகளும் எடுத்துக் காட்டுகின்றன.



தவிர இந்திய வர்த்தக நிலையங்கள் தயார்செய்யும் தையல் யந்திரம், மின்சார விசிறி, நூதன விளையாட்டுப்பொருள்கள் என்பன பாரத நாட்டின் தொழிற் சிறப்புக்கு எடுத்துக் காட்டுகளாகும். இந்தியா பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியுற்று வரும் வரலாற்றினைப் படங்களும் புள்ளி விபரங்களும் விளக்குகின்றன. பொருள்கள் யாவும் கலாரசனையுடன் ஒளிமயத்தில் அழகுறக் காட்சிக்கு வைத்திருக்கும் சிறப்பே தனி. பார்ப்பவர்கள் அனைவரும் வைத்த கண் வாங்காமல் அப்படியே நின்றுவிடுகின்றனர். இத்தகைய ஓர் அரிய சந்தர்ப்பத்தை வட பகுதி மக்களுக்கு இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் அளித்திருப்பதற்காகக் கலை விழா நிர்வாகிகள் அவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளனர்.

### இலங்கை

இலங்கை அரசினரின் ஆதரவிற் குடிசைக் கைத்தொழில்கள் விருத்தி யடைகின்றன வென்பதற்குக் குடிசைக் கைத்தொழிற் பகுதியிலுள்ள கைப்பணிக் கலைப்பொருள்கள் சான்றுகும்.

அரசினரின் கைத்தொழில், கடற்றொழில் ஆராய்ச்சிப் பகுதியினரின் காட்சிப் பொருள்கள் அனைவரும் பார்க்கவேண்டியன. வர்த்தகத் துறையில் இலங்கை விருத்தியடைந்துவருமென்ற நம்பிக்கையை இவைஎமக்கு ஊட்டுகின்றன. கடல்படு திரவியங்கள் நாட்டின் வளத்துக்கு இன்றியமையாதனவென்பதை இப்பகுதி எடுத்து இயம்புகிறது.

கூட்டுறவுப்பகுதி, விவசாயப்பகுதி, அரசினர்விற்பனவுப்

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

# நால்வரின் அபிப்பிராயம்

புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர் திரு ஜி. பி. டி. நேசமாணிக்கம் பி. ஏ. எழுதுவதாவது:

இப்போது அரசாங்கம் நிதிநெருக்கடி காரணமாய்ச் சில சிக்கனத் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்திருப்பதைப் பற்றிப் பொதுமக்கள் பல்வேறு அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்டிலுள்ளோரின் ஜீவியமுறைகளை நன்குணர்ந்தோர் ஆசிரியர்களே என்றெண்ணி, அவர்களுக்குட் பரந்த உள்ளம் உடையவரெனக் கருதப்படும் நால்வரை யான் சந்தித்துப் பேசியபோது பின்வரும் அபிப்பிராய பேதங்களை அறியக்கூடியதாக இருந்தது.

### சம்பவத்தின்பின் சம்பிரதாயம்

சுமார் 20 வருடகாலம் ஆசிரியத் தொழிலே பார்த்துவரும் கல்லூரி அதிபரொருவர் வருமாறு கூறியுள்ளார்:— "இந்நாட்களில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு வேறு வழியொன்றுமில்லாமல் அதிகாரிகள் இத்தகைய தீவிர நடவடிக்கைகளைக் கையாள வேண்டிய நிர்ப்பந்தத்துள்ளாயினர் என்பதை நான் திட்டவட்டமாக அறிந்திருக்கிறேன். ஆனால் கோரியா யுத்தம் மூன்று ஆண்டுகளில் முடிவடையாமல் மூப்பது வருடங்களுக்கு நீடித்து நடக்குமென எங்கள் அரசியல் நிபுணர்கள் திட்டம் போட்டிருந்தனரா? இப்போதைய நெருக்கடி நிச்சயம் வந்தெய்துமெனக் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவர்களுக்குத் தெரியாதா?"

"ஐயா அவர்கள் தான் அறிவில்லாதவர்கள், இந்த இடைஞ்சலை முன்னறிந்து கொள்ளும் திறனற்றவர்கள் என்று வைத்துக்கொள்ளுவோம்; நீங்களாகுதல் இந்த விஷயத்தை அக்காலத்திற் பகிரங்கப்படுத்தி யிருக்கலாமே" என்ற புகாருக்குப் பெரியார் பதிலளிக்காமல் மௌனஞ்சாதித்தார்.

### "வெள்ளாடு நனையுதென்று .........."

இன்னொருவர் தமிழ்ப் பாடசாலை யொன்றின் தலைமை ஆசிரியர். அவருக்கு அரிசி மான்யம் நிறுத்தப் பட்டதைப் பற்றிக் கவலையேயில்லை. "எதைத்தான் நிற்பாட்டிய போதும் இந்த அரசாங்கம் சிறுரின் வயிற்றிலே அடிக்கலாமா" என்று வினவினார். பிரஸ்தாப உத்தமரின் நேர்மைக் கௌரவத்தில் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அவரைப் பற்றி ஆராய்ந்து யான் அறிந்தது என்னவெனில்: அரசாங்கம் இலவசமாய் விநியோகிக்கும் மத்திய போசன மான்யத்தின் பெரும் பாகத்தைத் தாமே விழுங்கிப் பாடசாலைச் சிறுவர்களை வாட்டிவரும் பரோபகாரிகளில் இந்த ஆசியரும் ஒருவரென்பதே.

### ஆத்திரம் முறையானது!

மூன்றாவது பேர்வழியின் பொழுதுபோக்குப் படிப்பித்தல், ஆனால் அவர் கண்ணுங் கருத்துமாயிருந்து பார்க்கும் உத்தியோகம் 'புளி' வியாபாரம். சமீபத்திற் புகையிரதப் பிரயாணச் சீட்டுகளின் கட்டணங்கள் உயர்த்தப்பட்டதை அவர் நினைக்கும் போதெல்லாம் அவர் முகத்திற் பல நாட்களாய் இருண்டு மழைபெய்கிறதினால் ஒரு பிரதேசத்திற் காணப்படும் இயற்கைமயம் போன்ற துக்கசாகரத் தோற்றம் உண்டாகும், காரணம் யாதென்று கண்டுபிடிக்க முயல்வோர் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஐந்தரை ஆறு மணிக்கு இந்த யதார்த்தவாதியின் இல்லத்துக்குச் சற்றே தூரத்திலிருக்கும் புகையிரத நிலையத்துக்குச் சென்றாற் காரியம் வெளியாகும். சூறாவளிக் காற்று வீசினாலென்ன, சோனாமாரியான மழை பெய்தாலென்ன, வாரம் தவறாமல் வெள்ளிக்கிழமை சாயந்தர வேளையில் அவர் ஒரு உடுப்புப் பையுடன் கொழும்பு வண்டியில் ஏறுவார். 'புளி' வியாபாரம் முடிந்த பின்னர் காசு நோட்டுகளைப் பெருவாரியாய்ப் பையில் திணித்துக்கொண்டு திங்கள் காலை அவர் ஊருக்குத் திரும்பிவிடுவது வழக்கம். எனவே, இப்பேர்வழி புகையிரதப் பிரயாணக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டதை நினைத்துத் தென்னாலி இராமனைப் போல் விம்மி விம்மி அழுதாலும் அழக்கூடும்.

### ஆசிரியையின் அட்டகாசம்

இறுதியில், பயிற்றப்பட்ட ஆசிரியை யொருவரைச் சந்தித்தேன். அவர் கூறியது மேலும் வியப்பை அளித்தது மன்றித், தங்கள் தங்கள் தேவைக்குகந்த பொருள்களை மலிவான கிரயத்துக்குக் கொள்வனவு செய்வதே மாந்தரின் பேரவா என்னும் உண்மையை வலியுறுத்தினது. எவ்வித சாமான்களின் விலையை அதிகரித்தாலும், எத்தகைய சேவைக்கும் கட்டணத்தை உயர்த்தினாலும் 'பவுடரு'க்கும், 'சொக்கிளேற்'றுக்கும், பட்டாடைக்கும் விலைகளை உயர்த்தும் படி உத்தரவிட்ட தங்கள் நிதி அமைச்சர் பிரமசரிய விரதம் அனுஷ்டிக்கிறாரா என்று அவா என்னைக் கேட்டார்.

### "உலகம் பலவிதம்"

பண்டைக் காலத்து உரோமா புரியிற் சிறப்புடன் விளங்கியவரும் கண்ணியம் வாய்ந்த நாவலருமாகிய சிசரோ என்பார் 'Quot homines tot sentential' என்று கூறியிருக்கிறார். தமிழில் அது "எத்தனை மனுஷரோ அத்தனை அபிப்பிராயங்கள்" என்ற பொருள் தரும்.

புத்தூர், 1-8-53

■

## வடபகுதித் துறைமுகம்

சென்ற ஈழகேசரி இதழில் தங்கள் தீவுப் பகுதி நிருபர், அரசினர் வட பகுதியில் ஒரு துறைமுகத்தைத் திறந்து வைக்கப்போவதாகப் பல

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

கடிதர், கட்டுரையாளர்களின் கருத்துக்கள் ஈழகேசரியின் சொந்தக்கருத்துக்களாமெனக் கொள்ளவேண்டிய ஆவசியகமில்லை. ப-ர்


# விவசாயிகளுக்கு விசேஷ அறிவித்தல்!

கடந்த 40 வருடங்களாக இலங்கையிலுள்ள தோட்டங்களுக்கும் விவசாயிகளுக்கும் தேவையான பசளை வகைகளைக் கொடுத்து வருகின்றோம். இந்த அனுபவத்தின் பயனாக நாங்கள் கீழ்க்காணும் பயிர்களுக்கேற்ற மிகவும் சிறந்த கலவைகளைத் தயாரித்துள்ளோம்.

| | | |
|---|---|---|
| வெற்றிலை | பழ மரங்கள் | றப்பர் |
| வெண்காயம் | புல்வகைகள் | கரும்பு |
| மிளகாய் | தானியவகைகள் | சிகரெட் புகையிலை |
| எலுமிச்சை | பசும்புல் | சுருட்டுப் புகையிலை |
| கொக்கோவா | அன்னாசி | தேயிலை |
| தென்னை | பப்பாசி | தக்காளி |
| கோப்பி | வாழை | அவரை, பயறு |
| பருத்தி | உருளைக்கிழங்கு | காய், கறி |
| பூமரங்கள் | நெல் | கிழங்குவகை |

கமத்தொழில் பற்றிய விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும்.

முழு விபரங்களுக்கும் எழுதவும், அல்லது 'டெலிபோன்' பண்ணவும், அல்லது எங்களை வந்து காணவும்.

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

## கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி,

லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாய மாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

## The Colombo Commercial Company, LIMITED.

INCORPORATED IN GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4921]

★ ஒல்லாந்தர் காலத்து இன்னல்களையுந் தாண்டி வண்ணையில் விளங்கும் வைத்தீசுவரன் கோயில் மகிமை பற்றி வைத்தீசுவர வித்தியாலயக் கலைவிழா மலரில் வெளியாகியுள்ள இக் கட்டுரை பழைய காலச் சம்பவங்களை நினைவூட்டுகின்றது. ப-ர்.


# தமிழுக்கு நிலைக் களன்

## வண்ணை வைத்தீசுவரன் கோயில் வரலாறு

வித்துவசிரோமணி
சி. கணேசையர்

இக்கோயில் கோபாலச் செட்டியார் புத்திரன் வைத்தியலிங்கச் செட்டியாரால் இற்றைக்கு 163 வருஷங்களின் முன் (1790 A. D.) கட்டுவிக்கப்பட்டது. கோபாலச் செட்டியார் ஒல்லாந்தர் அரசு செய்யும் காலத்திலே தமது மனைவியாரோடும், சோழநாட்டினின்றும் இவ்வியாழ்ப்பாணத்திற்கு வந்து இங்கேயே குடியாகவிருந்து ஒல்லாந்த அரசனிடத்தில் துவிபாஷகராக விருந்த பிரமஸ்ரீ கொச்சிக் கணேசையர் என்னும் பிராமணோத்தமரிடம் உத்தியோகம் பார்த்து வந்தார். கணேசையர் காரணமின்றி ஒருநாள் கோபாலச் செட்டியாரைக் கண்டித்தபோது, செட்டியார் அவருத்தியோகத்தினின்றும் விலகிப் பலசரக்கு வியாபாரம் செய்துவந்தார். வியாபாரம் செய்யும் காலத்தில் அவர் ஒல்லாந்தர் தேசாதிபதி வீட்டிற்குப் பலசரக்குக் கொடுக்கும் வழக்கமுடையவராயிருந்தார். தேசாதிபதியாரின் மனைவியார் கோபாலச் செட்டியாருடைய நேர்மை, விசுவாசம், நற்குணம், நல்லொழுக்கம் முதலியவற்றைக் கண்டு அவரிடத்தில் மிக்க அபிமானமுடையவராயிருந்தார். அதனால் கோபாலச் செட்டியாருக்குத் தேசாதிபதி வீட்டிலும் மதிப்பு அதிகமாயிற்று. கோட்டையிலுள்ளவர்களுக்கும், சேனைகளுக்கும் வஸ்திரமும் உணவுக்குரிய பண்டங்களும் கொடுத்து வந்தார். இதனால் அவருக்கு வருவாய் அதிகப்பட்டது.

இப்படியிருக்கையில் கூழங்கைத்தம்பிரான் என்னும் ஒரு பெரியார் இந்தியாவிலிருந்து இவ்வியாழ்ப்பாணத்தில் வந்து கோபாலச் செட்டியாரோடு நண்பு பூண்டு அவருடைய உதவியுடன் வசித்திருந்தார். அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும், சித்தாந்த சாஸ்திரங்களிலும் மிக்க பாண்டித்தியமுடையவர். சிவபக்தியும் சிவானுபூதியுமுடையவர். இவர் வந்திருந்த காலத்திலே கோபாலச் செட்டியாருக்கு ஒரு புத்திரன் பிறந்தான். பிறந்தமையைக் கேட்டுக் கூழங்கைத்தம்பிரான் கோபாலச் செட்டியாரிடம் சென்று, "உன் புத்திரனைத் தூக்கிக் கொண்டுவா" என்றார். செட்டியார் மகிழ்ந்து அப் புத்திரனைத் தூக்கிக்கொண்டுவந்து அவருக்குக் காட்டினார். காட்டியபோது, அவர் மிக மகிழ்ந்து, ஆசீர்வதித்து, "இப் புத்திரன் பெருங் கருமங்கள் செய்யப் பிறந்திருக்கிறான், இவனுக்கு வைத்தியலிங்கன் என்று பெயரிடுக" என்று சொல்லிப் போயினர். கோபாலச் செட்டியாரும் மகிழ்ந்து அப்புதல்வருக்கு வைத்தியலிங்கச் செட்டியார் என்றே பெயரிட்டு அழைத்து வந்தார். அப் புதல்வரும்



[படம் உரிமை பெற்றது]

நற்குண நற்செய்கை உடையவராக வளர்ந்து பன்னிராண்டுப் பராயமடைந்தார். ஒருநாட் செட்டியார் தம் புதல்வரைத் தம் கடையில் இருக்கச் செய்துவிட்டுப் போசனஞ் செய்யப் போயிருந்தார். அப்பொழுது ஒல்லாந்த தேசாதிபதியின் மனைவியார் கோபாலச்செட்டியார் கடைக்கு முன்னே தமது குதிரை வண்டியை நிறுத்தி விட்டுச் செட்டியார் எங்கே என்று அப் புதல்வரை வினவினர். உடனே அப்புதல்வர் எழுந்துபோய் ஒரு மாதுளங்கனியைக் கொண்டுவந்து, இதை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்று கொடுத்தார். அதற்கிடையிற் செட்டியாரும் போசனம் முடித்துக்கொண்டு மீண்டனர். தேசாதிபதியின் தேவி அவரிடம் இச் சிறுவன் யாரென்று கேட்கச் செட்டியார் சிறியேன் புத்திரன் என்றார். அது கேட்ட தேவி மகிழ்ந்து அச் சிறுவனைத் தமது வண்டியிலேற்றிக் கொண்டு தமது வீட்டிற்குச் சென்றார். தமக்குப் புத்திரர் இல்லாமையால் அன்று முதல் இச் சிறுவரைத் தமது புதல்வராகப் பாவித்துக் கொண்டாடி வந்தார். போசன நேரத்தில் மாத்திரம் அவரை வீட்டிற்கு அனுப்பி மற்றைய காலமெல்லாம் தமது வீட்டிலேயே வைத்து வளர்த்துத் தாமே ஒல்லாந்த பாஷையையும் பயிற்றி வந்தார். பதினெட்டு வயது வரையும் அச்சிறுவர் தேசாதிபதி வீட்டிலேயே இருந்தார்.

பின்பு ஒருநாள், தேசாதிபதி முத்துச் சலாபக் குத்தகை விற்கப்போகிறாரெனக் கேள்விப்பட்ட அச் சிறுவர் தன்னை வளர்த்த தாயாரிடம் சென்று, முத்துச் சலாபக் குத்தகை வாங்க விருப்பமுடையேன்; அதனை வாங்குவதற்கு உதவி புரிய வேண்டும் அம்மா என்றார். அது கேட்ட தேவி முகமலர்ந்து ஒரு கடிதம் வரைந்து, அவரிடம் கொடுத்து "இதனைக் கொண்டுபோய்க் கச்சேரியில் உன்னை வளர்த்த தந்தையாகிய தேசாதிபதியிடம் கொடுப்பாயாக" வென்றார். அதனை வைத்தியலிங்கச் செட்டியாரென்னும் அச் சிறுவர் வணக்கத்தோடு வாங்கிக் கொண்டு போய்த் தேசாதிபதியைக் கண்டு வணங்கி அவரிடம் கொடுத்துப் பக்கத்தே நின்றார். அதனைத் தேசாதிபதி வாசித்து முகமலர்ச்சியோடு அவரை நோக்கி "முத்துக் குத்தகை வாங்கப் போகிறாயா?" என வினவ, அவரும் "ஆம் ஐயா" என்றார். அப்பொழுது பக்கத்தேயிருந்த பிரதான மந்திரியாகிய கொச்சிக் கணேசையர் அவரை நோக்கி, "நீயும் குத்தகை வாங்கப் போகின்றாயா?" என்றார். கணேசையர் கேட்டதை அவதானித்த தேசாதிபதி மனசிலே கோபமுடையவராகி ஐயரை நோக்கி, "முத்துக் குளிப்புக் குத்தகையை இச் சிறுவர் பெயருக்கு எழுதி அதற்குப் பிணையாக உன் பெயரை எழுதுக" என்று கட்டளையிட்டார். ஐயர் தேசாதிபதியின் கருத்தையறிந்து யாதும் எதிர் பேசாது குத்தகையை எழுதி விட்டார். அச் சிறுவரும் குத்தகையை ஏற்றுக் கிரமமாக நடத்தி ஒரு லட்சம்

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

# ஈழத்துக் கலாசாரப் பரம்பரை *

கௌரவ. சு. நடேசன்

பாரத நாட்டின் பெருமையை நினைவூட்டும் இப் பெரிய புராதன நகரின்கண் நின்று பேசும்போது, இலங்கையின் பூர்விக சரித்திரத் தோற்றங்கள் என் சிந்தையில் நெருங்கி வருகின்றன. இங்குள்ள அசோகனின் இரும்புத் தூணைக் காணும்போதெல்லாம், அசோகன் காலத்திற் புத்த சமயம் இலங்கையில் முதன்முதலாகக்கொண்டு வந்து பரப்பப்பட்ட செய்தி நினைவுக்கு வருகின்றது. டில்லிக்கு நான் புறப்படச் சில நாட்களுக்கு முன்னர்தான் போசன் என்னும் திருவிழா இலங்கையிற் கொண்டாடப்பட்டது. அசோகனின் மைந்தனுகிய மகிந்தன் என்னும் புத்த குரு இலங்கையிலுள்ள மிகுந்தலை என்ற இடத்தில் வந்து இறங்கிய சம்பவத்தை இவ் விழாக் குறிப்பதாகும். மிகுந்தலைக் குன்று இலங்கையின் புராதன தலைநகராகும். இது அனுராதபுரத்துக்கு அணித்தாகவுள்ளது. பெருமை வாய்ந்த அசோகன், தனது மகனைமாத்திரமன்றித் தனது அரிய புத்திரியாகிய சங்கமித்தா என்னும் பிக்குணியையும் புத்தபெருமானின் போதனைகளை இலங்கையில் விளக்கஞ் செய்ய அனுப்பினர். இவ்விருவாது வருகையால் இலங்கையின் சரித்திரம் புதிய உருவத்தைப் பெற்றது.

புத்த சமயம் இலங்கைக்கு வந்தபின்னர் அநேக துறைகளில் இலங்கையின் பெருமை வளர்ச்சியடைந்தது. இலங்கையை அரசுபுரிந்த அரசர்கள் புத்த சமயத்தை விருத்தி செய்வதில் மிக்க அக்கறை காட்டி வந்தனர். இலங்கையின் பல பாகங்களில் அநேக விகாரைகளையும், தாதுகோபங்களையும் எழுப்பினர். அனுராதபுரம் முதலிய பழைய நகரங்களில் எத்தனையோ தாதுகோபங்கள் இடிந்து சிலமடைந்திருப்பதை இன்றுங் காணலாம். அவைகளைக் காணும்போதெல்லாம் சஞ்சி நகரிலுள்ள ஸ்தூபங்களின் ஞாபகம் ஏற்படாது போகா. புத்த சமயம் எவ்வளவு ஆர்வத்துடன் மக்களாற் கைக்கொள்ளப்பட்டதென்பதை இக் கட்டடங்களே நன்கு எடுத்துக் காட்டுவன.

### சிற்பம்

புத்த சமயத்துடன் சிற்பக் கலையும் இலங்கைக்கு வந்து சேர்ந்தது. இலங்கையின் பல பாகங்களில் மிக்க வனப்பும் நுணுக்கமும் வாய்ந்த சிறந்த பழைய கட்டடங்களை இன்றுங் காணலாம். புத்த சமயம் இந்தியாவிற் பிறந்தாயினும், இலங்கையில்தான் அதன் பெருமையையும் ஆதிக்கத்தையும் இன்று காணலாம். இலங்கையில் வாழும் சிங்கள மக்களின் வாழ்க்கையில் புத்த சமயம் எவ்வளவு செறிந்துள்ளதென்பதை நேரே பார்த்தாற்றான் விளங்கும். தமது சமயத்தைச் சிங்கள மக்கள் உயிர்போல் ஓம்பி வருகின்றனர். சிங்கள மக்களின் நாகரிகம் இந்தியாவினின்று பெறப்பட்டது. அது புத்த சமயத்தைப் பீடிகையாகக் கொண்டது.

### பெரஹரா

இலங்கை மக்களின் கலாசாரம் புத்த சமயத்தோடு நெருங்கிய தொடர்புடையது. புத்த சமயத்தைப்பற்றிக் கூறும் அநேக பழைய நூல்கள் இலங்கையிலுள. அவைகள் விகாரைகளில் பொன்போற் பாதுகாக்கப்பட்டு வந்தனவாகும். புத்த பெருமானது போதனைகட்கு இலங்கையிலேயே வியாக்கியானங்கள் வரையப்பட்டிருந்தன. அவைகளை அப்படியெடுத்து எழுதுவதற்காகவே புத்தகோஷன் என்னும் பௌத்த குரு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தனராகச் சரித்திரங்கள் கூறும். பழைய பொக்கிஷங்களைக் கண்டு தரிசிப்பதற்காகவே இந்தியா, சீனு, பர்மா முதலிய நாடுகளிலிருந்து யாத்திரிகர்கள் திரளாக இலங்கைக்கு வந்தனர். இன்றும் பெரஹரா விழா கண்டியிற் புராதன சிறப்புக்களுடன் நடைபெற்று வருகின்றது. புத்த சமயிகட்கு இவ் விழா மிக்க ஊக்கத்தையும் பரபரப்பையுமுண்டாக்குவது. இவ் விழாப்போது புத்தபெருமானின் தந்ததாதுவை யானையில் ஏற்றி வீதிகள் தோறுங்கொண்டு செல்வர். நூற்றுக்கணக்கான யானைகளும் இலட்சக்கணக்கான மக்களும் இவ் விழாவிற் பங்கு பற்றுவதைக் காணலாம்.



கண்டியில் இன்றும் நடைபெறும் பெரஹரா

### தமிழர் ஆதிக்கம்

பெரஹரா என்னும் விழாவைத் தரிசிப்போர் தமிழரின் ஆதிக்கம் எவ்வளவு இலங்கையிற் பரவியுள்ளதென்பதைக் காட்டும். தென்னிந்திய சரித்திரங்களை ஆராய்ந்தோர் சிலப்பதிகாரம் என்னும் பழைய இலக்கியத்தை அறியாதிருக்கமாட்டார். அதிற் கூறப்படும் கண்ணகியை இலங்கை வாழ் சிங்களர் பத்தினித் தேவியெனக் கொண்டாடுவர். கண்ணகி தேவிக்குச் சேரன் செங்குட்டுவன் தனதுநாட்டில் ஆலயம் அமைத்து விழாக் கொண்டாடியபோது இலங்கை யரசனுகிய கஜபாகு என்பவனையும் அழைத்திருந்தான். இலங்கையின புராதன சரித்திர காவியமாகும் மஹாவம்சம் என்னும் நூலிலும் கஜபாகு என்பவனைப்பற்றிக் கூறப்பட்டுளது. கண்ணகி வணக்கத்தை இலங்கையில் நிலைப்படுத்திய பெருமை கஜபாகுவுக்கேயுரியது. ஓகஸ்ட் மாதத்தில் நடக்கும் இப் பெரஹரா விழாவில் பத்தினி தேவிக்கும் விசேஷ இடம் உண்டு.

### ஒற்றுமை

இலங்கையில் பௌத்த சமயிகள் மாத்திரமன்று, இந்துக்களும் தொகையாக வாழ்கின்றனர். சிங்களர் தொகையிற் கூடியவராயினும் தமிழரின் ஆதிக்கம் குறைந்ததல்ல. வட இலங்கையிற்றான் தமிழரின் கலாசாரம் நன்கு நிலைபெறுகின்றது. இலங்கைச் சரித்திரத்தை ஆராய்ந்து நோக்கின் இடைக்கிடை சோழ பாண்டிய அரசர்கள் படையெடுத்து வந்து இலங்கையில் அரசு புரிந்த வரலாறுகளை யறியலாம். தமிழருக்கும் சிங்களர்க்குமிடையில் பலமுறை யுத்தங்கள் நிகழ்ந்தனவாயி

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

* புது டில்லியில் வானொலிமூலம் ஆங்கிலத்திற் பேசிய தன் தமிழாக்கம்.

# விதியின் கை

உபகுப்தன்



“ஒருவன் தன் மனைவி, புதல்வர், உடன்பிறந்த பெண்கள், மாணாக்கர், ஏவலாளர், மருமகள், தம்பி ஆகிய இவர்கள் குற்றம் செய்யின் அவர்களைச் சிறிய கயிற்றினாலும் சிறு மூங்கிற் கோலாலும் அவர் தம் உடலின் பின்புறத்தில் அடிக்கலாம். ஒருபொழுதும் தலைக் கண் அடித்தலாகாது.”

—சுக்கிரநீதி அத்தியாயம் 4. சூத் 90, 91

## அத்தியாயம் 6

எத்தனையோ மனோதத்துவ நூல்களைப் பேராசிரியர்மார் ஆசிரிய கலாசாலைகளிற் படிப்பித்தும், அவைகளை எல்லாம் பரீட்சைக்காக நெட்டுருப்பண்ணியும் நடைமுறையில் வரும்போது 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என்ற பழைய பழமொழியைத்தான் மருதஞ்சேரிக் கிராமத்துப் பாடசாலையிற் காணமுடிந்தது அமிர்தாம்பிகையால்.

தம்பி தங்கச்சி என்ற தயவு முறையான விளிப் பெயர்களெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கநாதமாய், பொருளற்ற சொற் கூட்டமாய், காற்றோடு கலந்து போக, வர்ண ஜால காட்சிப் படங்களும் பருப் பொருள்களும் தினசரி செய்து பாதுகாக்க முடியாத, பரீட்சைகாலமென்னும் திருவிழாவுக்கு சோடினைப் பொருளுக்கே உதவ வெண்கட்டியும் அலரித்தடியுமே அவள் கைகளில் காட்சியளித்ததில் வியப்பில்லை.

பாண் என்று சொல்லப்படும் பண்டத்தை வரிசையாய் வாங்கிப் பாதியைக் காலத்துக்கும் பாதியை வயிற்றுப் பசிக்கும் பகிர்ந்துவிட்டுத் தண்ணீர் குடிப்பதற்குப் போன இடத்திலே சாஸ்வதி என்ற சாதிக்காரப்பிள்ளைக்கும், சண்முகம் என்ற ஹரிஜன மாணவனுக்கும் நடந்த சண்டையிலே சரசுவின் மூக்கிலே இரத்தம் சொட்ட, அமிர்தத்தின் அலரித்தடி ஆவேசமாகச் சண்முகத்தின் முதுகைப் பதம் பார்த்து விட்டது. விஷயம் இவ்வளவுதான்!

இப்படித் தினசரி பாடசாலையிலே ஆயிரத்தெட்டு நடக்கும். அடுத்த நாள்... வெறும் புகார்—சிறு உறுமல்—'அவனாடா அடித்தவன்?' என்ற அதிரும் அதட்டல்... அவ்வளவுதான். பழையபடி மாமூல் பிரகாரம்......

ஆனால் இது பெரும் கிளர்ச்சியாய் உருப் பெற்றுவிட்டது. இந்தச் சிறு பொறிக்குச் சாதி அபிமானம் என்னும் பெற்றோல் ஊற்றிப் பழைய வர்மத்தைச் சாதிப்பதற்காக முயன்றுகொண்டிருந்தார் பொன்னம்பலவாணர். இந்தப் 'புண்ணிய' கைங்கரியத்தினாலே ஏறிக்கொண்டு போன பிள்ளைகள் வரவு ஒரேயடியாகப் படுத்துவிட்டது, சண்டி மாட்டைப்போல.

'உந்தப் பாடசாலையில் நீதி நியாயம் கிடையாது; எங்கள் பிள்ளைகள் குற்றம் செய்தாலும் செய்யாவிட்டாலும் அடி அவர்களுக்குத்தான்; நாங்கள் இனிமேல் பிள்ளைகளை விடமாட்டோம்; அவர்களின் தேகம் இரும்பாம்; மற்றப்பிள்ளைகளின் மேனி பஞ்சாம்... இது உந்த உபாத்திமாரின் எண்ணம்' இதுதான் மருதஞ்சேரி ஹரிஜன வட்டாரத்தின் ஆண் பெண் அனைவரும் ஒரே முகமாய்க் கூறிய குற்றச்சாட்டு.

படுத்த 'சண்டிமாட்டை' ஆதரவுகாட்டியோ அடித்துப் பயமுறுத்தியோ எழுப்பியே தீரவேண்டும் என்ற நிலை வந்தவுடனே ஒவ்வொரு வீட்டுப் படலையையும் திறக்க வேண்டிய நிர்ப்பந்தம் மாசிலாமணிக்கு ஏற்பட்டது. திறந்த படலை ஒவ்வொன்றிலும் மேற் கூறிய வரவேற்பு அர்ச்சனையை அவன் கேட்டதும் திகைத்துப்போனான். எல்லோரும் ஒரேபல்லவியைப் பாடுவதினால் இதில் ஏதோ சூது இருக்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு பாடசாலையை அடைந்தான்.

தன்னுடைய அனுபவமற்ற தன்மையினாலும் முன் கோபத்தினாலும் பாடசாலையிற் 'சீர்குலைவு' ஏற்பட்ட துக்கத்தினால் மனச் சோர்வு அடைந்த அமிர்தம், வீட்டிலே இரவு தகப்பனார் கூறியதைக் கேட்டதும் மனக்கலக்கம் அடைந்தாள். இந்தச் செய்தியை மாசிலாமணிக்குக் கூறினால் தங்கள் 'காதல்' வாழ்க்கையாகிய பாலம் இடிந்து சுக்கு நூறாகிப் போய்விடவும் கூடும். ஆனால் கூறாது விட்டாலோ...... தன்னாலே பாடசாலைக்கு ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மாற்றுமருந்து செய்ய மணியினாலே முடியாது போய்விடவும் கூடும். இந்த இருதலைக் கொள்ளியினிடையே அகப்பட்ட எறும்புபோலத் துடித்த நிலையை அவள் முகம் காட்டிற்று. 'அடுத்தது காட்டும் பளிங்கல்லவா?' அது.

காதலை ஒருபுறம் ஒதுக்கிவிட்டுக் கடமையைச் செய்வதற்கு முன்வந்தாள் அந்த வீரநங்கை. பாடசாலை வாயிலிலே சோர்வோடு வந்த மாசிலாமணியைப் பார்த்து அவள் பின்வருமாறு கூறினாள்:—

“என்னாலேதான் இப் பாடசாலைக்குப் பிள்ளைகள் வருகின்றார்களில்லை... தயவுசெய்து நான் சொல்வதை நம்புங்கள். இன்று தொடக்கம் நான் இந்தப் பாடசாலைக்கு வருவதை நிறுத்திக்கொள்ளப் போகிறேன். நேற்றிரவு என் தகப்பனாரும் எனக்கு இதையேகூறி என் சம்மதத்தைக் கேட்டார். விதியின் கை அப்படியே எழுதியிருக்கும்போது என்னால் என்ன செய்ய முடியும்? ஆனால் உங்கள் மாமனாரிடம் கூறுங்கள் 'ஆனைக் கொருகாலம் என்றால் பூனைக்கொருகாலம் வரும்' என்பது நமது நாட்டுப் பழமொழி... அது பொய்யாது என்று”.

இடியேறுண்ட நாகம்—கடன் கொண்டார் நெஞ்சம்—கண்ணில்லான் பெற்றிழந்த அடுந்துயரம் என்றெல்லாம் கவிகள் வருணிக்கும்போது மாசிலமணி சிரிப்பது வழக்கம். ஆனால் அதே நிலையைத் தத்ரூபமாகத் தன்னிடத்திலே— தன் உள்ளத்திலே—அவன் கண்டான்; திகைத்தான்; தடுமாறினான்; வார்த்தைப் பஞ்சமே ஏற்பட்டுவிட்டது. கண்ணீர்ச் செல்வம் பெருக்கெடுத்தது.

“அமிர்தம்! உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை என்று நீ உன் வகுப்பு மாணவர்களுக்குப் படிப்பிக்கும் போது உன்னுடைய மனநிலையைத் திறந்து காட்டுகிறாய் என்று நான் எத்தனை தடவை மனதுள் மகிழ்ந்திருக்கிறேன். இன்று நீ கூறியதைக் கேட்டபின் சாதாரண ஒரு பெண்தான்; சில நேரம் வாய் வீச்சுக்காட்டும் ஒரு......” என்று முடிக்க முடியாமல் மணி திணறினான்.

“பெண்களில் வாய் வீச்சுக்காரர் இருக்கலாம்...... ஆனால் ஆண்களில் கோழைகள் இருப்பது தெரியவில்லையா?...

'என் தகப்பனார் எனக்கு உத்தியோகம் எடுப்பதற்குப் பாடுபட்டார். அது அவர் கடமை. அதைச் செய்யும்போது உங்கள் மாமனாரைக் கேட்டுச் செய்ய வேண்டும் என்பது அவருக்குத் தெரியாது. வீணாக இந்த விஷயத்திலே அவர் தலையிட்டு மறைமுகமாக, தாழ்த்தப்பட்ட சனங்களை எங்கள் மேல் ஏவி விட்டுக் கொண்டிருக்கிறார்.... இன்று எனக்காக உங்கள் மாமனார் இத்தப் புண்ணிய கைங்கரியத்தைச் செய்யலாம். ஆனால் நாளைக்கு, உங்களுக்கு மாறாக என் தகப்பனும் இப்படி வேலைகளைச் செய்ய ஆரம்பித்தால்... அதை நினைத்துத்தான் நானே இன்றைக்கே இந்தப் பாடசாலையை விடுவதாக முடிவு செய்து விட்டேன்.”

தனக்காக அன்றி மாசிலாமணியின் நன்மைக்காகவும் தன் உத்தியோகத்தைத் திரஸ்கரிக்க அவள் கொண்ட முடிவை மாற்றமுடியாது என்பதனையும், தன்னும் மாட்டிற்குக் கொடியைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுத்தான் கொடுக்க வேண்டுமென்பதனையும் உணர்ந்து அவன் ஒன்றுமே பேசவில்லை. தலைமை ஆசிரியரும் மற்றவர்களும் கேட்டதற்கு அவன் பதில் ஒரேவிதமாக இருக்கவில்லை.

......இரண்டு சிறுவர்கள் ஏற்றிய இரண்டு பட்டங்கள் அகஸ்மாத்தாக அருகருகே வானத்திலே ஏறிக் காதற் பார்வைகள் பார்த்துக்கொண்டும் புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டும் இருந்தன. திடீரென்று ஏற்பட்ட புயற்காற்றுக்குப் பயந்து தன்பட்டத்தை ஒருவன் வலித்துக்கொண்டுபோக ஆசைப்பட்டான். புயற்காற்று இயற்கை நிகழ்ச்சியல்லவா? ஆனால் விஷமப்பிரசாரம் இயற்கை நிகழ்ச்சியா?

இந்த எண்ணங்களோடு அவன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். பொன்னம்பலவாணர் அவனைப்பார்த்துப் பின்வருமாறு சொன்னார்:

“ஏன்? பாடசாலைக்குப் பிள்ளைகள் வரவில்லையா? கேள்விமுறையின்றி அடித்தால் யார்தான் பாடசாலைக்குப் பிள்ளைகளை விடுவார்கள்; அவள் அப்பன் பணத்தை வீசி எறிந்து இதையும் சமாளிக்காமல் ஏன் பார்த்துக்கொண்டிருக்கிறான்? நீ படலை படலையாகத் திறக்க வேண்டி இருக்கிறது. என் மானம்போகிறது”

“அப்படி ஒன்றிருந்தால் தானே போவதற்கு” என்று கேட்டுவிடலாம்போலிருந்தது மணிக்கு. ஆனால் இந்தவிஷயத்திலே ஏதாவது பேசினால் தங்கள் 'காதல் விஷயம்' வெளிப்பட்டுவிடும்; அது எரிகிற அடுப்பில் எண்ணெயை ஊற்றுவது போல இருக்கும் என்று அவன் நினைத்தான்.

அவன் நினைத்தது போல விதி நினைக்கவில்லை........

அடுத்த நாள் வந்த இரண்டு 'மொட்டைக் கடிதங்கள்' இன்னும் நிலைமையைக் குழப்பிவிட்டன. அமிர்தத்தை எதிர்பார்த்த இடத்தில் ஆலகால விஷம் பிறந்தது.... அக் கடிதத்தில் இருந்ததுதான் என்ன.

# நெருப்புப் பறக்கும் பிரசாரம்

## பல்கலைக் கழகத்தில் மாணவர் 'குஷி'

மலைநாட்டு நிருபம் : : நமது நிருபர்

பேராதனை, 5-8-53

அரசியல் விஷயங்கள் என்றாலே பல்கலைக்கழக மாணவருக்கு ஒரே குஷிதான். அரசியல் தலைவர்களைத் தாம்பூலம் வைத்து அழைத்து அவர்கள் பேச்சைக் கேட்பது மட்டுமன்றி இடையிலே கேள்விகள் என்ற சாட்டையைச் சொருகுவதிலும் அவர்களுக்குத் தனி ஆனந்தம். சமீபத்திற் சினிமா மண்டபத்தில் இன்றைய நாட்டின் பொருளாதார நிலையும் அதிலிருந்து வெளியேறும் மார்க்கமும் என்னும் பொருள் பற்றித் தோழர் கெனமன் பேசினார். நாட்டின் நிலைபற்றி அவர் உருக்கமாகப் பேசியது குறிப்பிடத் தக்கது. 'ஆடுநனையுதென்று ஓநாய் குந்தியிருந்து அழுததாம்' என்று இவர் பேச்சைச் சொல்வதற்கில்லை!

### தீப்பொறி

ஆட்டைக்கடித்து மாட்டைக் கடித்து இறுதியில் மனிதனையும் கடித்த மாதிரியாக அரசாங்கத்தின் போக்கு இன்று உள்ளது. ஆனால் மக்கள் இதற்கேற்ற பரிகாரம் செய்ய முனைந்து விட்டனர்: இதன் பிரதிபலிப்புப்போல நாடெங்கணும் எதிர்ப்புக் கூட்டங்கள் நடக்கின்றன. தோழர் பீட்டர் கெனமனின் கட்சி கண்டியில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தியது. பேச்சில் தீப்பொறி பறந்தது என்று சொல்ல வேண்டுமா? இத் தீப்பொறியோடு உண்மைத் தீப்பொறியும் யூ. என்.பி. என்ற கூட்டை எரித்துத் தள்ளியது. யு. என். பி என எழுதப்பட்ட கூட்டை மக்கள் முன்னிலையில் எரித்ததைத் தான் இங்கு குறிப்பிடுகிறேன்

### இந்தியர் சிக்கல்

சென்ற மாதம் 31-ந் திகதி பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கச் சார்பில் முன்னாள் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. கெ. இராமலிங்கம் இலங்கை இந்தியர் சிக்கல் என்னும் பொருள் பற்றிப் பேசினார். “உங்கள் உண்ணாவிரதத்தால் ஏற்பட்ட பலன் என்ன?” என்ற கேள்விக்கு “இன்று டட்லி சேனநாயகாவும் பண்டிதர் நேருவும் சந்தித்துப் பேசியதுதான்” என்று பதிலளித்தார்.

### கட்சிப் பிரசாரம்

சென்றமாதந்தான் பொதுக் கூட்டங்களின்மாதமாகக் கழிந்ததென்றால் இந்தமாதத் தொடக்கமும் அதன் தம்பியாக மாறிவிட்டது. 'அகப்பட்டதைச் சுருட்டும்' கொள்கையைக் கடைப்பிடித்துத் தங்கள் கட்சிகள் பற்றிப் பிரசாரம் செய்வதிற் சில கட்சிகள் முனைந்துள்ளன. இன்று தம் கட்சிபற்றி விளக்கம் கொடுக்குமுகமாக திரு பண்டாரநாயகா கண்டியில் நடாத்திய பொதுக் கூட்டத்தைத்தான் இங்கு குறிப்பிடுகிறேன்.

### ஹவுஸ் அறிவுரை

வதுளையில் ஊவா மாகாணத்து ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. ஊவாக்கல்லூரி அதிபர் திரு. ஹெட்டி ஆராய்ச்சி தலைமை வகித்தார். வித்தியாதிபதி ஹவுஸ் அவர்கள் பேசும்போது, “பெண்கள் வெறும் ஏட்டுக் கல்வி கற்பது மட்டும்போதாது. கொழும்புப் பெண்களிற் பலர் வீட்டு வேலைகள் எதுவுமே தெரியாதிருக்கிறார்கள். இந்நிலை மாற வேண்டும்” எனக் குறிப்பிட்டார். “வீட்டுவேலைகளிலும் நாட்டு வேலைகள்தான் சிறந்தன என அவர்க்குத் தெரியாதுபோலும்' என்று ஒரு கொழும்புப் பெண்மணி முணுமுணுக்கிறார்.


# பாலபோதினி

[அரிவரி தொடக்கம் – ஏழாம் வகுப்பு வரை]

சிறந்த தமிழ் வாசினைப் பாட புத்தகங்கள்

இலங்கையின் எல்லாப் பாகங்களிலுமுள்ள பெரும்பாலான தமிழ், ஆங்கில வித்தியாசாலைகளில் உபயோகிக்கப்பெற்று வருகின்றன.

வித்தியா பிரசுர சபையாரின் நியதிகளுக்கமைய தெளிவான சித்திரங்கள், ஏற்ற எழுத்துக்கள், திறமானகடதாசி ஆகியவற்றிற் பிரசுரமாகியிருக்கின்றன.

ஒவ்வொரு மாகாணத்திலும் பிரதான புத்தகசாலைகளில் விற்பனைக்கு இருக்கின்றன.

விநியோக உரிமையாளர் :

தனலக்ஷ்மி புத்தகசாலை, சுன்னாகம்.

வைத்தீசுவர வித்தியாலயம் வயதிற் சிறியதொன்றாயினும் அது சமயம், பண்பாடு, ஆகிய இரு பெரும் அடிப்படைகளில் நல்லுரம் பெற்றுளது. இத்தன்மையால் ஈழமணித் திருநாட்டில் இக் கலைக் கோயில் தனக்கென நிரந்தரமானதொரு தனியிடத்தைப் பெற்று விளங்குகின்றது.

# கலை வளர் கோயில்

ஈழத்துத் தென்முனை தொடங்கித் தமிழ் நாட்டின் வட எல்லை வரை புகழோங்கி நிற்கும் பெருமை வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்துக்குக் கிடைத்துள்ள ஒரு தனிச் சிறப்பாகும். இந்த எல்லையுந் தாண்டி இதன் புகழ் எட்டியிருக்கும்போது இவ் வித்தியாலயத்தைப் பற்றியோ, அதன் ஆசிரியர்களைப் பற்றியோ, வித்தியாலயத்தைப் பரிபாலித்து வரும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைப் பற்றியோ இலங்கை மக்களுக்கு அறிவுறுத்த வேண்டிய அவசியமே யில்லை.

காலஞ்சென்ற திரு த. நாகமுத்து ஆசிரியர் அவர்களால் 1913-ம் ஆண்டில் நிறுவப்பெற்ற இக் கலைக் கோயில் எத்தனையோ கண்டங்களையும் தாண்டி இன்று கலை விழாக் கொண்டாடி நாட்டு மக்களின் ஆதரவையும் ஆசியையும் பெற்றுவரும் நிலையை அடைந்திருக்கின்றது. பணம் படைத்த வேறு பல பள்ளிக்கூடங்கள் சாதிக்க முடியாதவற்றை வைத்தீசுவர வித்தியாலயம் சாதித்து வருகின்றதாதலின் அது கருவில் திருவுற்ற தொன்றாகவே கருதப்படவேண்டும்.

இராமகிருஷ்ண மிஷன் இலங்கையிற் கல்வி நிலையங்களை நிறுவுவதற்கு உறுதுணையாக விருந்து அவற்றை வளர்த்து வந்த விபுலாநந்த அடிகளார் இவ் வித்தியாலயத்தைப் பாராட்டிச் சீராட்டி நன்கு பரிபாலிக்கக் கூடிய ஆசிரியர்களையும் அபிமானிகளையும் பெற்றிருந்தார். அவர்களில் அநேகர் வித்தியாலயத்தின் ஆக்க விருத்தியில் ஆர்வங் கொண்டு உழைத்து வருகின்றனர். இன்று அதிபராக விளங்கும் திரு ச. அம்பிகைபாகன் அவர்களும், உதவி அதிபர் திரு. கா. வயிரமுத்து அவர்களும், முதன்மை ஆசிரியர் திரு. து. சீனிவாசகம் அவர்களும், சலியாது உழைத்து வரும் ஏனைய ஆசிரியர்களும் வித்தியாலயப் பணியே தங் கடன் எனக் கருதிக் கடமை யாற்றி வருவது நாடறிந்ததொன்று.

இவ் வித்தியாலயத்தின் சேம லாபங்களிற் பங்கு பற்றி அதன் உற்ற நண்பனாகவிருந்து பல்லாற்றானும் உதவி புரிந்து வருபவர்களிற் கலைவல்லுநர் திரு. க. நவரத்தினம் அவர்கள் மிக முக்கியமானவர்கள்.

'உள்ளது ஒன்று; அறிஞர்கள் அதனைப் பல பேரிட்டு வழங்குவார்கள்.' என்பது வேத வாக்கு, ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பது தமிழன் கண்ட தத்துவம். இவற்றையே பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சதேவரும் சுவாமி விவேகானந்தர் மூலம் உலகிடைப் பரப்பியுள்ளார். இத்தகைய பெரிய அருள் வள்ளலின். பெயர் பூண்டு, வைத்தீசுவரனின் அருள் பெற்று, இளம் மாணவ மாணவிகளுக்கு இன்னறி வூட்டும் இவ் வித்தியாலயம சமூக வாழ்வில் ஓர் அரும் பெரும் பணியை ஆற்றி வருகின்றது. சமயவெறியும் நாத்திகமும் தலைவிரித்தாடும் இந் நாட்களில் இளம் உள்ளங்களை எல்லாம் தட்டுத் தடுமாறி அவலக் குழியில் ஆழாமல் வித்தியாலயம் தடுத்துத் தற்காப்பளித்து வருகின்றது.

வைத்தீசுவர வித்தியாலயம் வயதிற் சிறியதொன்றாயினும் அது சமயம், பண்பாடு, ஆகிய இரு பெரும் அடிப்படைகளில் நல்லுரம் பெற்றுளது. இத்தன்மையால் ஈழமணித்திருநாட்டில் இக் கலைக் கோயில் தனக்கென நிரந்தரமானதொரு தனியிடத்தைப் பெற்று விளங்குகின்றது.

இதன் வளர்ச்சி, நாட்டின் வளர்ச்சி; உண்மைச் சமயத்தின் வளர்ச்சி; கலையின் வளர்ச்சி; இன்பத் தமிழின் வளர்ச்சி. இவையனைத்தும் வளம்பெற்று ஓங்குவதற்காக இன்று கலை விழா எடுக்கின்றனர். நாட்டுமக்கள் நலம் புரிந்து நல்வாழ்வு வாழ்வதற்குக் கலைமடந்தை கருணை பாலிப்பாளாக! இ. அ.



வித்தியாலய அதிபர் ச. அம்பிகைபாகன்



உதவி அதிபர் கா. வயிரமுத்து

# கலைவிழாக் காட்சிகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதி, சமாச்சாரப்பகுதியினரும் மிகச் சிரமத்துடன் தத்தம் பகுதிகளை அமைத்து விழாவுக்குச் செல்லும் மக்களுக்கு ஆலோசனைகளையும் வேண்டிய வேண்டிய விபரங்களையும் கொடுத்து வருகின்றனர். அரசாங்க தேசீய பிரசாரப் பகுதியினர் ஆற்றிவரும் சேவை போற்றத்தக்கது.

நகை வியாபார சாலைகளிலுள்ள ஆபரணங்களும் வைரநகைகளும 'டால்' வீசி நாரீமணிகளை இடத்தைவிட்டுநகராது செய்துவிடுகின்றன. இவற்றையடுத்துப் பலப்பல வர்த்தகக் காட்சி சாலைகளும் அழகுற அமைந்துள்ளன.

## பொழுது போக்கு

இன்னிசை யமுதைப் பருகிக்கொண்டே கலைவிழா மைதானத்தில் உல்லாசமாகப் பொழுது போக்கலாம். மின்சார வேகச்சுழல் ஊஞ்சல், கண்ணுக்கினிய காட்சிகள், மூளைக்குவேலைகொடுக்கும் யுக்திவிளையாட்டுக்கள் மந்திர ஜாலங்கள், மனித சக்தியைப் பயன்படுத்தி மக்களைப் பிரமிக்கச்செய்யும் தீரவீரச் செயல்கள் யாவும் ஒருமுறைபோற் பலமுறை பார்த்தாலும் தெவிட்டாதன.

## விஞ்ஞானக் காட்சி

வைத்தீசுவர வித்தியாலய விஞ்ஞானப் பகுதி ஆசிரியர்களும் மாணவர்களும் அதிக சிரத்தையுடன் ஏற்படுத்தியுள்ள விஞ்ஞானக் காட்சி அற்புதமானது. அங்கு நடைபெறும் விஞ்ஞான விந்தைகளைக் கண் முன் கண்டு களிபேருவகை கொள்ளாதவர்களே இல்லை. தாவரத்தின் இல்லறத்தையும் விலங்கினத்தின் விசித்திரங்களையும், விஞ்ஞானத்தின் நுட்பங்களையும் நேரிற்பார்த்துப் பயனுறுவதே முறை. இவற்றினும் மேலாகக் கலை விழா மைதானத்தில் மாலை வேளைகளில் நடைபெற்று வரும் கர்ணாமிர்த நாதசுவரக் கச்சேரி இனிய விருந்தாகும். சென்ற வியாழக்கிழமை நாதசுவர வித்துவான் திரு வெண்காடு சுப்பிரமணியம் பிள்ளை கோஷ்டியினர் அமுதகானத்தை அப்படியே பிழிந்து கொட்டினார்கள்.

இவர்களை இங்கு வரவழைத்த பெருமை வல்லுவெட்டித்துறை விநாயகசுந்தரமவர்களைச் சாரும். சுப்பிரமணியம் பிள்ளை அவர்களின் இசைஞானத்தைப் பாராட்டி வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் தங்கப்பதக்கம் ஒன்றை அளித்தனர்.

மின்னொளி வர்ண வெள்ளத்திடையே வானோங்கி நிற்கும் தாமரைக் கோபுரத்தின் எழிலே தனி. இத்தகைய கலைச் சிறப்புக்களுடன் அமைந்துள்ள வைத்தீசுவர வித்தியாலயக் காணிலவும் கலை விழாவும் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து அவர்களை எல்லாம் இன்ப சாகரத்தில் திளைக்கச் செய்கின்றன வென்றே கூறவேண்டும்.

## சித்திர சாலை

கலைவிழாவின் சிகரமாக விளங்குவது சித்திரசாலையேயாகும். தமிழரின் நாளாந்த வாழ்க்கையுடன் கலை எவ்வளவாக நெருங்கி வந்திருக்கின்றதென்பதை நன்கு எடுத்துக் காட்டும் முறையிற் இக் கலைக் காட்சி அமைந்துள்ளது.



...கவின் கலைகளை வளர்த்து அவற்றைத் தாம் அனுபவிப்பதுடன், பிற நாட்டிலும் புகழ் ஈட்டும் பெருமைக்குத் தமிழினமும் உரியது.

சித்திரசாலைக்குட் சென்றவுடன், 'அடடா! வழி தெரியாமல் ஏதோ ஒரு கோயிலுக்குள் வந்து விட்டோமே' என்றுதான் எண்ணத் தோன்றும். அங்குள்ள வெள்ளி மயிலும் விக்கிரகங்களும் குத்துவிளக்குகளும் ஏனைய கலையம்சம் வாய்ந்த கோயில் தட்டு முட்டுகளும் எம்மை இப்படி எண்ணச் செய்து விடுகின்றன. சிற்ப சித்திர வேலைப்பாடுகளைப் கல்லிலும் செம்பிலும் மரத்திலும் திரைச் சீலைகளிலும் செய்யும் தமிழன் அவற்றில் எல்லாம் தெய்வாம்சங்களை இணைத்துத் தான் இன்புறுவதோடமையாது வையகத்துக்கும் அவ்வின்பத்தை வழங்கி வருகின்றான்.

ஆலயங்களில் மலர் மாலைகளாலும் வெண்டுகில்களாலும் சந்தனச் சாந்தினாலும் அலங்கரிக்கப்பெற்ற தெய்வத் திருவுருவங்கள் எவ்வித அலங்காரங்களுமின்றிச் சித்திர சாலையிற் பார்க்கும்போதுதான் அவற்றின் கலையழகு முழுவதையும் பருக முடிகின்றது!

சித்திர சாலைக்குத் தெய்வவணப்புத் தந்து நிற்கும் பூப்போதிகையில் பூமழை பொழிதல், பன்னீர்தெளிதல் ஆகிய காட்சிகளை செதுக்கியுள்ள அழகு சொல்லுந்தரமன்று. இப் பூப் போதிகை யாழ்ப்பாணம் கதிரேசன் கோயிலிற் கண்டெடுக்கப்பட்டது. மரத்திற் செதுக்கப்பட்டுள்ள இச் சித்திர வேலை ஏறத்தாழ 75 ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிகின்றது. இத்தகைய நுட்ப வேலை செய்வோர் மிகச்சிலரே இப்போது யாழ்ப்பாணத்தில் இருக்கின்றனர்.

ஓங்கிய வாளுடன் காட்சி தரும் மதுரை வீரன், வைரவர், காளி, கணபதி ஆகிய உருவங்கள் யாழ்ப்பாணத்து திரு. இராமகிருஷ்ண ஆசாரி, திரு. சினிவாச ஆசாரி ஆகிய கலைஞர்களின் கை வண்ணங்களாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் உருவத்தை மு. சுப்பிரமணிய ஆசாரி செம்பிற் சமைத்துள்ளார். ஐம்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம்—நல்லூரிற் திறமையான வேலைப் பாடுகளுடன் செய்யப்பெற்ற வெள்ளிமயில் தோகைவிரித்து ஒளிபரப்பி நிற்.

[தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க]

ஈழகேசரி

சுன்னாகம், விஜய ஆடி உடு
— காந்தி ஆண்டு 84 —
பேசுந்தந்தி இல. 805

# குடிசைத் தொழில்

ஒரு நாடு உண்மையான முன்னேற்றத்தையடைய வேண்டின் அந்நாட்டு மக்கட்கு வேண்டிய பல்வேறு பொருள்களும் உள் நாட்டிலேயே பெறக்கூடிய நிலை எய்தவேண்டும். அப்போதுதான் நாட்டின் செல்வநிலை உறுதியடைந்ததாகக் கருதப்படும். இப்போதைய நிலையில் இலங்கை மக்கள் நாளாந்த வாழ்க்கையில் உபயோகிக்கும் பொருள்களில் நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதமானவை அந்நிய நாடுகளிலிருந்து பெறப்படுகின்றன. இவற்றின் பொருட்டு நம் நாட்டிலிருந்து வெளியேறும் பணத்துக்கு எல்லையில்லை.

விரைந்து நம் நாடு வளம்பெற்று இன்ப நிலையை அடையவேண்டுமாயின், இலங்கையிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் குடிசைத் தொழில்கள் நிலைபெறச் செய்யவேண்டும். அதிக செலவின்றியும் மிக்க சிரமக்குறைவுடனும் இனிது செய்யக்கூடிய எத்தனை குடிசைத் தொழில்கள் இருக்கின்றன. அவைகளைக் கிராமங்களில் வாழும் பொதுமக்கள் ஊக்கத்துடன் கையாண்டால் நமது நாடு வளம்பெற இடமுண்டு. கிராமவாசிகள் பொதுவாகக் கமக்காரர்கள், கமஞ்செய்யும் நேரம்போக மிகுதிக் காலங்களை வீணே கழிக்கின்றனர். அக்காலங்களில் உபயோகத்தைத் தரும் குடிசைத் தொழில்களைச் செய்யலாமல்லவா? இந்தியாவில் நூல் நூற்றல், நெசவு செய்தல், கடதாசி செய்தல், சீனி, வெல்லம் என்பன செய்தல், இனிப்புப் பண்டங்கள் செய்தல் முதலிய குடிசைத் தொழில்கள் மிக்க இலாபத்துடன் நடைபெறுவதாக அறிகின்றோம்.

ஐரோப்பாவில் எத்தனையோ சிறிய நாடுகள் செல்வம் நிறைந்து முன்னேற்றமடைந்திருப்பதற்குக் காரணம் அந்நாடுகளில் ஊக்கத்துடன் கையாளப்படும் குடிசைத் தொழில்களே. சுவிற்சலந்து, டென்மார்க், பெல்ஜியம் முதலிய நாடுகளிற் குடிசைத் தொழில்கள் மிகத் தாராளமாகக்கையாளப்படுகின்றன. புடவைகள் நெசவு செய்யப்படும் கைத்தறிகள் இல்லாத இல்லங்கள் அங்கு கிடையாதாம். பாற் பண்ணைகளைக் கிராமங்களில் எவ்வளவு இலாபத்துடன் இந்நாட்டவர் நடத்திச் சித்தி யடைகின்றனர்.

இலங்கையிலும் இவ்விதமாகக் குடிசைத் தொழில் விருத்தி யுறுவதற்கு என்ன தடையுண்டோ நாமறியோம். அரசினர் பெரும் பொருள் செலவு செய்து எத்தனையோ முக்கிய தொழிற்சாலைகளை அமைக்கத் திட்டம் போட்டுள்ளார். ஆரம்பித்த எத்தனையோ தொழிற்சாலைகள் விரும்பியபடி நன்மை தராது தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே அரசினர் காலந்தாழ்க்காது குடிசைத் தொழிலை நாட்டில் விருத்திசெய்ய வழிவகைகளைக் காணவேண்டும். கிராமங்களிற் குடிசைத்தொழில்களை ஆரம்பிப்பதுடன் நின்றுவிட இயலாது; கிராமங்களிற் தயார்செய்யப்படும் பொருள்களை விலை கொடுத்து வாங்கித் தேவையான இடங்கட்கு அனுப்புதற்கு ஏற்ற நிலையங்களையும் வகுக்க வேண்டும். சொந்த நாட்டின் புராதன பண்புக்கும் கலாசாரத்துக்கும் மாறான முறையில் வாழ்க்கையை நடத்திக்கொண்டு, நாட்டினை உயர் நிலைக்குக் கொண்டு வருவது இயலாத விஷயம். உள் நாட்டில் தயாராக்கப்பட்ட பொருள்கள் பார்வைக்குச்சிறப்பாக இல்லாத விடத்தும் அபிமானத்துடன் அவைகளை ஓம்பி வருவது பொதுமக்களின் கடமையாகும். ஆகவே நமது நாட்டின் செல்வ நிலை உறுதியடைய வேண்டின், குடிசைத் தொழில் விருத்தியில் அரசினரும் பொதுமக்களும் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

## பாலர் களரி

### 3-வது கதம்பக் கச்சேரி

சென்ற சனிக்கிழமை (1-8-53) மாலை 6 மணியளவில் சுண்டிக்குளிப் பெண்கள் கல்லூரி மண்டபத்தில் வடமாகாணப் பாலர் களரியின் மூன்றாவது கதம்பக் கச்சேரி, வித்தியாதிகாரி திரு. கே. கிருஷ்ணபிள்ளை அவர்கள் தலைமையில் நிகழ்வதாயிற்று. இக் கதம்பக்கச்சேரியில் 13 பள்ளிக்கூடப் பாலர் வகுப்பு மாணவ-மாணவிகள் பங்குபற்றினர். ஒவ்வொரு நிகழ்ச்சியும் பரவசமடையச் செய்யுந்தன்மைவாய்ந்திருந்தது. சிறு குழந்தைகளை ஏற்ற விதமாகப் பயிற்றி மேடையில் ஒழுங்காகவும், நிதானமாகவும் பாடவும், நடிக்கவும், நடனமாடவும், அப்பியாசிக்கவும் செய்வதற்கு ஆசிரியர்கள் எடுத்துக்கொண்ட சிரமும், விடா முயற்சியும் வீண்போகவில்லை என்பதை இக் கதம்பக்கச்சேரி நிகழ்ச்சிகள் காட்டிவிட்டன.

பாலர் களரி வித்தியாதரிசினி ஸ்ரீமதி கிறேஸ் துரைசிங்கம் அவர்களின் பெரு முயற்சியின் பேறாகவே இக் கதம்பக்கச்சேரி ஒழுங்குசெய்யப்பட்டு வெற்றிகரமாக நிறைவேறியது எனலாம். அன்றைய நிகழ்ச்சிகளிற் பங்குபற்றிய ஒவ்வொரு குழந்தைக்கும் சுவைமிகு பட்சணக் கையுறை வித்தியாதரிசினி அவர்களால் வழங்கப்பெற்றது.

—ந. நி.

### முருகப்பா மணிவிழா

குமரன் பத்திரிகை நடாத்தியவரும், மகளிர் இல்ல அதிபருமான திரு சொ. முருகப்பா அவர்களின் 60-ம் ஆண்டு நிறைவு விழா 23-8-53 ல் வருகிறது. தமிழ் நாடெங்கணும் இம்மணி விழா சிறப்பாகக் கொண்டாடப் படும்.

### கொழும்புத் தமிழ்ச் சங்கம்
### 11-வது ஆண்டு நிறைவு முத்தமிழ் விழா

இவ்விழா 15-8-53, 16-8-53 ஆகிய இரு நாட்களிலும் நிகழும். சென்னை கலை மகள் ஆசிரியர் வித்துவான் கி. வா. ஜகந்நாதன், எம். ஏ., அவர்களும, தனிநாயக அடிகளாரும் சனிக்கிழமை விரிவுரைகள் ஆற்றுவார்கள்.

ஞாயிற்றுக்கிழமை காலையில பட்டிமண்டபமும், மாலையில் வித்துவான் ஜகந்நாதனவர்களும, பண்டிதர் இ. வடிவேல அவர்களும், திருமதி பா. இலக்குமணன் பி. ஏ. அவர்களும் விரிவுரைகள் ஆற்றுவார்கள். இசையரங்கு முதலியனவும் நிகழும்.

# விகடம் மூர்த்தி

## கலைவிழாவிற் கதம்ப நிகழ்ச்சி

தமிழ் நாட்டிலே சில வருடங்களாகத் தமது நடிப்புத் திறமையினாலும் பிரமுகர்களைப் போலவும், சினிமா நடிகர்களைப் போலவும் உடையணிந்து அவர்களைப் போலவே பேசுவதினாலும் பாடுவதினாலும் புகழீட்டி வரும் விகடம் மூர்த்தி அவர்களை இரசிகர்கள்பலர் அறிவார்கள். ஆர். கிருஷ்ணமூர்த்தி என்ற தமது பெயரைச் சுருக்கிக் கொண்ட இந் நடிகர் இப்போது வெள்ளித் திரைகளிலும் மின்னி வருகின்றார். நல்ல சில பேசும் படங்களில் இவர் அருமையாக நடித்து இரசிகர்களின் அபிமானத்தையும் பெற்று வருகின்றார். 'சம்சார நௌகா' என்ற பேசும் படத்தில் டிக்கியாக நடித்து அனைவரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்ததை யார் தான் மறப்பார்கள். இப்போது ஆர். என். ஆர். படத்தயாரிப்பாளரின் படமொன்றில் நடித்து வருகின்றார். இது ஏ. வி. எம். படநிலையத்தில் படம் பிடிக்கப்பட்டு வருகின்றது. வேறுமொரு தமிழ்ப் படத்திலும் ஒரு பாத்திரத்தை ஏற்று நடிக்க இசைந்துள்ளார்.

பிரபல பாடகர்களைப் போலப் பாடும் சக்திபடைத்த விகடம் மூர்த்தி மிருதங்கம், கஞ்சிரா மோர்சிங் ஆகிய இசைக் கருவிகள் இன்றியே அவற்றினின்று எழும் இசையைத் தாமே உண்டாக்கிச் சபையோரை மகிழ்வித்து வருகின்றார்.

நகைச்சுவையரசு என். எஸ். கிருஷ்ணன், சாரங்கபாணி, ரி. ஆர். இராமச்சந்திரன், எல். நாராயணராவ், ரி. எஸ். துரைராஜா, தியாகராஜ பாகவதர், காலஞ்சென்ற பி. யு. சின்னப்பா ஆகியவர்களைப் போல திரு மூர்த்தி பாவனை செய்யும் ஆற்றலைப் பாராட்டாதவர்களே இலர்.

அத்துடன், இராஜாஜி, கல்கி, நாமக்கல் கவிஞர் போன்ற பெரியார்களைப் போலவும் மேடையிற் காட்சி தந்து வருகின்றார். இவற்றினும் மேலாக இவரின் பல்வேறு குரல்வகைகளும், சிரிப்பு ரகங்களும், நகைச்சுவை நிகழ்ச்சிகளும் பார்க்கவும் கேட்கவும் ஒரே ஆனந்தமாக விருக்கும்.

இவையனைத்தையும் வைத்தீசுவர வித்தியாலயக் கலை விழா மைதானத்திற் பார்க்கலாம். விகட மூர்த்தி அவர்கள் இதற்கென 11-8-53 செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத்துக்குச் சென்னையிலிருந்து விமான மார்க்கமாக வருகின்றார். அவர்களின் பல்வேறு நிகழ்ச்சிகளையும் கலைவிழாவிற் கண்டு களிக்கலாம். கவர்ச்சிகரமான தோற்றமும் இதமாகப் பேசும் வாசாலமுமுள்ள மூர்த்தி அவர்களிடம் யாரும் யாழ்ப்பாணம் என்றால் அதுநான்காவது தமிழ் விழாவாகத்தான் இருக்க முடியுமென எண்ணுபவர். இன்னிசைக் கோகிலம் எம். எல். வசந்தகுமாரியின் கணவரும் இவரே யாவர். இவரைப் பற்றி இனி என்ன கூற வேண்டும்.

## அமைச்சர் நடேசன்

தபால் செய்தி அமைச்சர் கௌரவ சு. நடேசன் அவர்கள் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயக் கலை விழாவையும் காணிவலையும் 8-8-53 சனிக்கிழமை திறந்துவைப்பார்கள்.

## செனேட்டர் அசீஸ்

சாஹிராக் கல்லூரி அதிபரான செனேட்டர் ஏ. எம். ஏ. அசீஸ் இவ்விழாவை 9-8-53 ஞாயிற்றுக்கிழமை திறந்துவைப்பார்கள்.

# கல்வியின் உன்னத நோக்கம்

## வித்தியாலயத்தில் நற் பயிற்சி

இந்தக் கலா சாரத்தை அடிப்படையாகக் கொண்ட கல்விதான் இந்த மாணவர்களுக்கு வேண்டப்படுவது. இத்தகைய கல்வியே இராமகிருஷ்ண மிஷன் வைத்தீசுவர வித்தியாலயத்திற் பயிலும் பிள்ளைகளுக்கு அளிக்கப்படுகின்றதென இளைப்பாறிய மாகாண வைத்தியரும் தமிழ் வள்ளலுமான டொக்டர் எஸ். சுப்பிரமணியம் அவர்கள் யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலயக் கலை விழாவையுங் காணிவலையும் சென்ற 5-8-53 புதன்கிழமை மாலை திறந்து வைத்துப் பேசியபோது குறிப்பிட்டார்கள்.

வித்தியாலய அதிபர் திரு எஸ். அம்பிகைபாகன் கலை விழாத் தலைவர் டொக்டர் ஸி. குருசுவாமி உட்பட்ட ஏனைய கலைவிழா நிர்வாகிகளும் அபிமானிகளும் டொக்டர் அவர்களை வரவேற்றனர். குத்துவிளக்கேற்றி விழாவைத் திறந்து வைத்த இப் பெரியார் இந்த சமயத்தின் சிறப்பினைக் குறிப்பிட்டதோடமையாது இராமகிருஷ்ண மிஷன் ஆற்றிவரும் பணிகளையும் பாராட்டியிருந்தார்கள். அவர் தொடர்ந்து பேசியதாவது, வைத்தீசுவர வித்தியாலயத்தின் நோக்கங்கள் உன்னதமானவை. அந் நோக்கங்களையெல்லாம் நிறைவேற்றி வைப்பதற்கு வித்தியாலயத்தில் இடம் போதாது. இந்நெருக்கடியைத் தீர்ப்பதற்குப் பணம் மிக அவசியமாகும். வித்தியாலய அதிபரும் நிர்வாகிகளும் ஆசிரியர்களும் ஏனைய அபிமானிகளும் வேண்டிய பணத்தைச் சேர்க்க முயற்சித்து வருகின்றனர். அதற்காகவே இக்கலை விழாவையும் ஏற்படுத்தியுள்ளனர். இவ்விழா மூலம் தாராளமானபணம் வித்தியாலய வளர்ச்சி நிதிக்குக்கிடைக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு அம்பிகைபாகன் அவர்கள் கலை விழாவையுங் காணிவலையும் ஏற்படுத்துவதற்கு உதவியாகவுள்ள அனைவருக்கும் நன்றி கூறினர். டொக்டர் குருசுவாமி அவர்கள் தலைமை வகித்தார்கள்.

## 'இன்ப நிதி'

கொழும்பிலிருந்து திரு. சி. இரத்தினம் அவர்கள் எழுதுவதாவது:

மக்களின் அறிவுப் பெருக்கமே இன்பந் தரும் நன் நிதியாகக் கொள்ளும் ஈழகேசரி வெகு சிறப்புடன் உளங்கவர் வகையிற் காட்சி தருவது போற்றக் கூடியதொன்றே.

அரசியல் சமயம் கல்வி முதலிய பல துறைகளிலும் புகுந்துவரும் கட்டுரை கவிதை கதை ஆகியன சிந்தனைக்கு நல்விருந்தாகும். செய்திகளை நிருபர்கள் சொல்லும் அழகும், முறையான மதிப்புரைகளைத் தரும் நமது வாசகசாலையும், பிள்ளைகளுக்குகந்த பாலர் பகுதியும், பல படப் பேசும் பாட்டைசாரியும் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளுக்குள்ளே ஒரு தனிச் சிறப்பையே பெற்றிருக்கின்றன. இன்னும் உண்மை நூல் வசனங்களையும் உயர்ந்தோர்மொழிகளையுந்தந்து அதற்கேற்ப பழைய கிராமம்—பட்டணத்து நாகரீகம் தாளக் காவடி—முதலானவற்றைப்படிப்போர் உள்ளத்திற் பட்டவர்த்தனமாகக் காட்டி எழுதும் நடைத்திறன் உபகுப்தனின் அறிவாற்றலைப் பிரதிபலித்துக் காட்டும் பளிங்கெனலாம். இன்னும் சிட்டின்றி அதிஷ்டம் பெற்ற வீரவாகுவைச் சிருஷ்டித்த கசின் 5 பெண்களைக் கொடுத்து இக்காலத்தைச் சொல்வதும் மெச்சத் தகுந்ததே.

இத்தகைய சிறப்புக்களோடு விளங்கும் ஈழகேசரி தினசரியாகும் நாள் என்நாளோ? இன்னுமொன்று: 'ஈழத்துத்தாகூர்', 'தங்கத் தாத்தா' எனப் போற்றப்படும் நாவலியூர் சோமசுந்தரப் புலவர் ஞாபக வெளியீடொன்றுக்கு முயற்சி செய்வதாகப் பத்திரிகை ஒன்றில் கண்டேன். இம் முதுகிழவர் சொன்ன பல்லாயிரம் பாக்களில் சிறந்த பல கவிகளைத் தெரிந்தெடுத்துச் சேர்த்து ஒரு நூலாக வெளியிடின் நலன்பயக்கும் சிறந்ததோர் நினைவு மலராக என்றும் விளங்குமன்றோ? தங்கள் பத்திரிகையில் பண்டிதர் வ. நடராசா, இலக்கிய மாணவன் ஆகியோர் புலவரைப் பற்றி எழுதியதைப் படித்ததால் முளைத்த யோசனையே இது.

## தேகவியோகம்:

### பிரமஸ்ரீ சி. தங்கசாமிஐயர்

புன்னாலைக்கட்டுவன் மகா வித்வான்பிரமஸ்ரீ. கதிர்காம ஐயர் அவர்கள் பேரனும், பிரமஸ்ரீ சிவஞானஐயர் அவர்கள் புத்திரனும், சைவ வித்தியாவிருத்திச் சங்க ஆசிரியருமான பிரமஸ்ரீ சி. தங்கசாமிஐயர் அவர்கள் தம்மைச் சிலகாலமாகப் பீடித்த நோய் காரணமாக சென்ற சனிக்கிழமை (1-8-53) காலை 7 மணியளவில் சிவபதம் அடைந்தனர். இவருக்கு வயது 52. இவர் கடைசியாகக் குப்பிழான் விக்கினேஸ்வர வித்தியாசாலையின் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினர். இவருக்கு 2 புத்திரரும் 1 புத்திரியும் உளர். இவரது பிரிவாற் றுயருறும் மனைவி, மக்கள், சுற்றமித்திரருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். இவரது ஆன்மா சாந்தியடைவதாக.

### மூளையற்ற வரவு செலவுத் திட்டம் ⊞ துட்டகைமுனு இரகசியச் சங்கம் ⊞ சோமசுந்தரப் புலவர் நினைவு.

# எதிர்க் கட்சி கண்டனமாரி

## தலைமை அமைச்சரின் ஆணித்தரமான பதில்

### கொழும்பு நிருபர் கடிதம்

7-8-53

ஜனப் பிரதிநிதிகள் சபையில் நிதி அமைச்சர் நிகழ்த்திய வரசெலவுத் திட்டப் பிரசங்கத்தின் பேரில் விவாதம் நடைபெறுகின்றது. அரசாங்கம் நெருக்கடியான நிலைமையில் உணவு மான்யத்தை நிறுத்திவிட்டதை எதிர்க்கட்சியினர் கண்டித்துப் பேசினர். வவனியா அங்கத்தவர் திரு எஸ். சுந்தரலிங்கம் பேசுகையில், " இவ் வரவு செலவுத் திட்டம் வெறுக்கத் தக்க மூளையில்லாத, நீதி நியாயமற்ற வரவு செலவுத் திட்டமாகும். இதன் உண்மையான தந்தை ஓர் அமெரிக்க கனவான் ஆவர். காலிமுக மைதானத்திலுள்ள விளக்குகள் ஒரு வருடத்துக்கு முன்னரே உடைபட்டிருக்க வேண்டும். இப்போது அவை காலதாமதமாக உடைபட்டுள்ளன." என்று காரசாரமாகப் பேசினர். இவ்வாறு எதிர்க்கட்சியினர் பொழிந்த கண்டன மாரிக்கு தலைமைஅமைச்சர் ஆணித்தரமான பதில் கொடுத்தார். "நம் நாட்டின் பொருளாதார நிலை சீர்கெட்டு விடாமல் இருப்பதற்காகவே நாம் உணவுமான்யத்தை நிறுத்தினேம். இந்தச் சிக்கலிலிருந்து நாம் வெளியேற ஆக்க வேலைக்குரிய யோசனைகளை எதிர்க்கட்சியினர் கூறினர்களோ வென்றால் அதுதான் இல்லை. திரு என். எம்பேரேரா ஒருவர் தான் சில யோசனைகள் கூறினர். ஆனால் அவை எல்லாவற்றையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஒரு பக்கத்தில் மான்யத்தை வெட்ட வேண்டாம் என்றும், மறுபக்கத்தில் உள்நாட்டுச் செலவுகளைக் குறைக்க வேண்டாமென்றும் யோசனை கூறும் எதிர்க்கட்சி ஒரு முக்கிய அம்சத்தை உணர மறந்து விட்டது. அதாவது, இவற்றுக்குத் தேவைப்பட்ட பணத்தை எப்படிப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுதான் அந்த முக்கிய பிரச்சனையாகும். இந்த நெருக்கடியான நிலையில் மக்கள் ஓரளவுக்குத் தியாகஞ் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதில் அவர்கள் தேசாபிமானத்தோடு நடந்து கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் எதிர்க் கட்சியினரும் சேர்ந்து அரசாங்கத்தோடு ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று மிகவும் உணர்ச்சியோடு பேசினர்.

**இரகசியச் சங்கம்**

பண்டாரவளைப் பிரதிநிதி திரு. கே. வி. டி. சுகததாசா பிரதிநிதி சபையில் பேசும்போது மிகவும் விசித்திரமான ஒரு சங்கம் வேலைசெய்வதைக் குறிப்பிட்டார். மதம், இனம், நாடு என்பனவற்றைப் பாதுகாக்கும் பெரு நோக்கம் கொண்ட ஒரு சங்கம் பொலநறுவையிலுள்ள துட்டகைமுனு சங்கம். இரகசிய சங்கமாக இருட்டில் தொண்டாற்றுவதன் மர்மம் விளங்கவில்லை. சிங்களரும் தமிழரும் ஒற்றுமையாகச் சகோதர மனப்பான்மையுடன் வாழவேண்டிய நாட்டில் இத்தகைய குறுகிய மனப்பான்மை வாய்ந்த சங்கம் நடைபெற அதுவும் இரகசியமாக நடைபெறக் காரணம் என்ன? இதனை அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்கலாமா? வேறு ஒரு சம்பவத்தையும் அவர் குறிப்பிட்டார். "தமிழர் கதிர்காமத்தைத் தமக்குச் சொந்தமாக்க முயல்கின்றனர். இது நாட்டைக் கைப்பற்றும் அவர்கள் முயற்சிக்கு அடிகோலுவதாகும் என்று நான் கூறுகின்றேன்" என்று சொன்னர். அப்படியானல் புத்தகயாவின் நிர்வாகத்தில் இலங்கைச் சிங்கள பௌத்தர் இடம் பெற்றது இந்தியாவை இலங்கைச் சிங்களர் கைப்பற்றும் முயற்சிக்கு அடிகோலுவதாகும் என்று அர்த்தமா? இப்படியான பொறுப்பற்ற வீண் கிளர்ச்சியை உண்டாக்கும் பேச்சுக்கள் பிரதிநிதிசபை அங்கத்தவர்கள் வாயால் வெளிவருவது விரும்பத்தக்கதன்று.

**கதிர்காம நிர்வாகம்**

கதிர்காமத்திலுள்ள இராம கிருஷ்ண மடத் திறப்புவிழாவிற் பல பெரியோர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன. அவற்றுள் இந்தியக் குடியரசுத் தலைவர் டொக்டர் இராஜேந்திர பிரசாத் அனுப்பிய செய்தி மிகவும் முக்கியமானது. இது இலங்கை இந்துக்களின் குமுறலுக்கு ஓரளவு ஆறுதல் அளிக்கும் செய்தியென்றே கூறலாம். அதுவும்புத்தகயாவைப் பௌத்த தலைவர்களிடம் ஒப்படைக்கப் பாடுபட்ட குடியரசுத்தலைவரிடமிருந்துவரும் செய்தியை இலங்கை அரசாங்கம் அசட்டை செய்ய முடியாது. அவருடைய செய்தியிற் கூறியிருந்தாவது: "புத்தகயாவில் சிரத்தை காண்பித்து வருவது போலக் கதிர்காமக் கோயிலிலும் நான் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இலங்கை இந்துக்கள் கோரியது எனக்கு ஞாபகமிருக்கிறது. ஒற்றுமைக்கும் நட்புக்கும் உழைத்து வரும் இராம கிருஷ்ண மிஷன் கதிர்காமத்தில் ஒரு மடத்தைக் கட்டியுள்ளதெனக் கேள்விப்பட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். நம்மிரு நாடுகளிடையே புதியதோர் கலாசார மத ஒற்றுமையை இம்மடம் ஏற்படுத்துமென்று நம்புகிறேன்."

கதிர்காமக் கோயிலுக்குச் சேரும் பணம் எவ்வாறு செலவிடப்படுகிறது. வருஷா வருஷம் பெருந்தொகைப் பணம் சேர்ந்தும், அந்தப் பணம் எங்கே? கோயில் நிர்வாகிகளோ கப்புராளைமாரோ இதுவரையில் தங்கள் பொறுப்பில் ஒரு மடமாவது கதிர்காமத்திற் கட்டவில்லையே. இக்கோயிலின் நிர்வாகம் இந்துக்களும் பௌத்தர்களும் கொண்ட ஒரு பொதுச் சபையிடம் ஒப்படைக்கப் பட்டால் ஓரளவு திருத்தமேற்படக் கூடும்.

**சோமசுந்தரப் புலவர் நினைவு**

ஈழநாட்டின் இணையற்ற கவியாக விளங்கிய நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களுக்குச் சிறந்த ஞாபக சின்னம் நிறுவும் பொருட்டுக் கொழும்பிலுள்ள அன்பர் பலர் சாகிராக் கல்லூரி மண்டபத்திற் கூடினர். அக் கூட்டத்தில் இவ்விஷயம் தொடர்பாக ஆவன செய்வதற்கு ஒரு சபை தெரிவு செய்யப்பட்டது. இதற்குத் தபால்-செய்தி அமைச்சர் திரு. சு. நடேசபிள்ளை தலைவராகவும், வித்துவான் சேதுகாவலர் காரியதரிசியாகவும் திரு. ஏ. பி. கந்தசாமி தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப் பட்டனர். முப்பது பேரைக் கொண்ட நிர்வாக ஒரு சபையும் தெரிவு செய்யப்பட்டது. இச் சபையினர் ஒரு பொது ஞாபகார்த்தக் கூட்டம் இவ்வார இறுதியில் நடத்த ஒழுங்கு செய்கின்றனர். யாழ்ப்பாணத்திலும் ஒரு கூட்டம் நடாத்தப் படும். இதை விடத் தனிப்பட்டவர்களும் பொதுக் கூட்டம் நடத்த ஒழுங்கு செய்து வருகின்றனர் எனக் கேள்வி அதில் புலவரிடம் அபிமானமுடைய யாவரும் ஒருங்கு கூடி ஒத்துழைத்தலே பெரிதும் விரும்பத்தக்கது.



### அமுத மொழி

தமக்கு அறமும் புகழும் பயவாத செயல்களை ஒருவர் என்றென்றும் செய்தல் ஆகாது.

— திருவள்ளுவர். —

**எஸ். சண்முகநாதன்**

இலங்கை தொல் பொருள் ஆராய்ச்சிப்பகுதியின் உபதலைவராகக் கடமையாற்றிய திரு. எஸ். சண்முகநாதன் அவர்கள் திடீரென இவ்வுலக வாழ்வை நீத்த துக்க செய்தி இன்று வெளியாயிற்று. தொல் பொருள் ஆராய்ச்சித் துறையில் இவரைப்போன்ற சிறந்த அறிஞரைக் காண்பது அரிது. திருக்கேதீசுவரத்திற் புதை பொருளாராய்ச்சி சம்பந்தமாகச் சிறந்த வேலை செய்து வந்தார். மேலும் இலங்கைக் கலைச்சங்கத்தின் முதுகெலும்பாகவும் விளங்கினர். கொழும்புப் பொருட்காட்சியில் இவர் அருந்தொண்டாற்றினர். நாடகங்களை அரங்கேற்றுவோருக்கு ஆலோசனை கூறுவதிற் சிறந்த பணி புரிந்து வந்தார். சிறந்த சைத்திரிகர். இவர் பொது வேலைப்பகுதி அதிபராக விருந்த காலஞ் சென்ற என். மகாதேவா அவர்களின் சகோதரர். அநேக ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். ஈழகேசரிக்கும் திருக்கேசுவரம் பற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை தருவதாக எனக்கு வாக்களித்திருந்தார். இவர் ஆன்மா சாந்தியடைவதாக.

# ஆந்திர மாகாணம்

## காஷ்மீர் பிரதமர் புதிய கொள்கை

புதிதாக அமைக்கப்படவிருக்கும் ஆந்திரமாகாணம் ஒக்டோபர் முதலாந் திகதியன்று உத்தியோக முறையில் ஆரம்பிக்கப்படும். இப்போது சென்னைப் பாராளுமன்றத்துள்ள ஆந்திர நாட்டுப் பிரதிநிதிகள் புதிய மாகாணத்தின் பிரதிநிதிகள் சபையினராக அமைவர். புதியவொரு தலைமை அமைச்சரும் பிரதிநிதிகள் சபைத் தலைவரும் மற்றைய உத்தியோகத்தர்களும் தெரியப்படுவர். அமைச்சர் அவையும் அமைக்கப்படும். தற்காலிகப் புதிய தலைநகராகக் கர்நூல் பட்டினம் வகுக்கப்படும். இப் பட்டினமே தலைநகராக வேண்டுமென்று முன்னர் ஆந்திர தேச காங்கிரஸ் கட்சியினர் முடிவு செய்தனர். ஆனல் வேஜ்ரூர் நகரைச் சிலர் குறித்து அதனைத் தலைநகராக்க எத்தனிக்கின்றனர். புதிய மாகாணத்தைச் சகல ஆடம்பர வைபவங்களுடன் திறந்து வைக்கப் பிரதமர் நேரு இணங்கியுள்ளார். இம் மாகாணம் ஏற்படவேண்டுமென ஆந்திர மக்கள் சென்ற இருபத்தைந்து வருடங்கட்கு மேலாக முயற்சி செய்துவந்தனர்.

**காஷ்மீர் பிரதமர்**

காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா தாம் இதுவரையில் கைக்கொண்டுவந்த தடிப்பான கொள்கைகளை இப்போது மாற்றத் தொடங்கியுள்ளார். பாகிஸ்தானைத் துரும்பாகத்தானும் மதியாது முற்றாக இந்தியாவைக் கட்டித் தழுவுகின்ற இவர் இப்போது இரு நாடுகளும் தமக்குச் சமம் என்கின்றார். இருநாடுகளின் நட்பும் தயையும் காஷ்மீருக்கு அவசியமென்கின்றனர். பாகிஸ்தான் மீது இவருக்கு அபிமானம் ஏற்பட்டிருப்பது நூதனமாகும். காஷ்மீர் மக்கள் இந்தியாவின் இறுகின தொடர்பினையும் நட்பினையும் இழப்பது வேண்டப்படுவதன்று. காஷ்மீர் இந்தியாவின் தொடர்பை நெருங்கிப் பெற்றுக்கொண்டாற்ருன் தளப்படியின்றி நிலைபெறவியலும்.

**சனசமூகம் உய்வடைய**

"கடவுளில்லை யென்று நாசத்தொழிலில் ஈடுபட்டுவரும் கம்யூனிஸம் உலகில் ஒரு போதும் சமாதானத்தை நிலைநாட்டப் போகின்றதில்லை. கடவுளுக்கு முதன்மை வழங்கிச் சமய சன்மார்க்க வழிகளை மேற் கொணடே உலக மக்களை உய்யச் செய்யலாம்" என்று டொக்டர் பிருங் புச்சானன் என்ற பெரியார் உலகச் சமய சன்மார்க்கப் புனருத்தாரண மகா நாட்டில் தலைமை வகித்துக் கூறினர்.

**விமான நிர்வாகம்**

இது வரையும் இந்தியாவின் விமானப் போக்கு வரத்துக்கள் உத்தியோகப் பற்றில்லாத அந்தரங்க வியாபார சமுதாயத்தவரால் நடத்தப்பட்டு வந்தன. இவ் விமானப் போக்கு வரத்தை நடத்தி வந்த சமுதாயத்தவர்க்கு அரசினர் உதவி மாத்திரம் வழங்கி வந்தனர். ஆனல் இப்போது புதிய முறையில் விமானப் போக்கு வரத்து நிர்வாகம் அமைக்கப் பட்டுள்ளது. அரசினர் ஆதிக்கத்திலும் மேற்பார்வையிலும் நடத்தப்படும் வியாபார சமுதாயங்கள் புதிதாக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. பொது மக்களுக்கும் இதிற் பங்கு பற்றும் உரிமையுண்டு. நிர்வாகத்தில் அரசினர்க்கும் அதிக பங்குண்டு. இலாபத்திலும் அப்படித்தான். இம் மாதம் தொடக்கமாக விமானப் போக்கு வரத்து நிர்வாகம் புதிய முறைப்படி நடைபெறும். இம்முறை தான் மேலைத் தேசங்களில் அதிகமாகக் கைக் கொள்ளப்படுவது. விமானப் போக்கு வரத்து விரும்பிய முறையில் விருத்தியடைதற்கு இப்புதிய நிர்வாக முறை பெரிதும் உதவியாகும். இந்தியாவின் பாதுகாப்புக்கும் இம்முறை மிக வசதியளிக்கும் என்பது அரசினர் கருத்தாகும்.

# கல்லூரிகளின் போட்டி

## வருடாந்த விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், 5-8-53

யாழ்ப்பாணக் கல்லூரிகளின் வருடாந்த விளையாட்டுப்போட்டி விழா சென்ற 1-8-53 சனிக்கிழமைபிற்பகல் யாழ்ப்பாண மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. வழக்கம் போல, பரி. யோவான் கல்லூரி, யாழ்ப்பாணக்கல்லூரி போன்ற ஒருசில கல்லூரிகள் இதிற் பங்குபற்றவில்லை. ஆயினும், ஆண்டுதோறும் அவைகள் நடாத்தும் விளையாட்டுப்போட்டியையும் அன்று தான் நடாத்தினர்கள் என்று கேள்விப்படும்பொழுது, போட்டி நடத்தும் 'தினத்தி'லாவது ஒரு ஒருமைப்பாட்டிற்கு அவை வரதனவே என்று திருப்தி அடையவேண்டியதுதான். எனினும், யாழ்ப்பாணத்துக் கல்லூரிகளுக்கிடையே இப்பிளவு நீடித்திருந்து வளர்வது அவ்வளவு விரும்பத்தக்கதல்ல.

மத்திய கல்லூரி மைதானத்தில் நடந்த போட்டியில், 19 கல்லூரிகள் பங்குபற்றின. இக்குடாநாட்டின் பலபாகங்களிலுமிருந்து அநேக பள்ளிக்கூடங்கள் ஆர்வத்துடன் பங்குபற்றின மாணவிகளுக்கும் இதில் பங்குபற்றும் சந்தர்ப்பம் இருக்கின்றபடியால் சிலபெண்பாடசாலைகளும் போட்டியிற் கலந்துகொண்டன. யாழ்ப்பாண மத்திய கல்லூரியே முதலிடம் பெற்றது.

யாழ்ப்பாணப் பட்டினத்தில் இருக்கும் கல்லூரிகளில் மட்டுமல்ல: மற்றையகல்லூரிகளிலும் கெட்டிகார மாணவ—மாணவிகள் உளர் என்பதை அன்று நடேசுவரக் கல்லூரி மாணவர்களும், யூனியன் கல்லூரி மாணவிகளும் நிரூபித்தனர். நடேசுவரக் கல்லூரி மாணவன் கே. பாஞ்சோதி 'ஜவலின்' எறிந்த திறமையை எல்லோரும் மெச்சினர். மாணவிகள் பங்குபற்றிய போட்டிகளில் யூனியன் கல்லூரி மாணவிகள் பலர் முதலிடங்களைப் பெற்றனர். மாணவிகளின் 4×110 யார் அஞ்சலோட்டத்திற்கென செனேட்டர் நடேசன் அளிக்கும் விசேட வெள்ளிக் கிண்ணத்தையும் அம்மாணவிகளே தெல்லிப்பளைக்குக் கொண்டுசென்றனர். — நமது நிருபர்


## மலாயாத் தமிழ் அன்பர்களுக்கு:

இதுவரை சிங்கப்பூரில் ஈழகேசரி விற்பனையாளராக இருந்தவரை நிற்பாட்டியுள்ளோம். புதிய விற்பனையாளர்களை விரைவில் நியமிப்போம்.

ஆண்டுச் சந்தா. வெள்ளி 6-00.

சிங்கப்பூர், பினங்கு, கோலாலம்பூர், ஆகிய இடங்களுக்கு ஈழகேசரி விற்பனை செய்வதற்கு முற்பணங் கட்டக்கூடிய பத்திரிகை விற்பனையாளர்கள் தேவை.

விபரங்களுக்கு எழுதுக.

அதிபர், ஈழகேசரி சுன்னுகம், இலங்கை

# 'நிதிநிலைமை சீராகும்'

## குரும்பசிட்டியில் உப தபால் நிலையம்

நமது நிருபர்

ஒரு நாட்டுக்கு எதிரிகளால் ஆபத்து ஏற்படுவது போலச் செல்வக் குறைவினாலும் ஆபத்து ஏற்படுவது இயல்பு எனத் தபால் — செய்தி அமைச்சர் கௌரவ சு. நடேசன் அவர்கள் குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டமொன்றுக்குத் தலைமை தாங்கிப் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

குரும்பசிட்டி புதிய உப தபால் அலுவலகத்தைச் சென்ற 1–8–53 சனிக்கிழமை பிற்பகல் 4–30–க்குத் தபால் — செய்தி அமைச்சரும் இப் பகுதியின் பாராளுமன்ற அங்கத்தினருமான கௌரவ திரு. சு. நடேசன் அவர்கள் நிபமேற்றித் திறந்துவைத்தார்கள். இத் திறப்பு விழாவில் யாழ்ப்பாணப் பெரும்பகுதித் தபாற் சேவைப் பிரதமாதிகாரி அவர்கள், தபாற் பகுதிப் பிரதம தலைவர் அவர்களின் பிரதிநிதியாகவும் சமுகமளித்திருந்தார்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஆதரவில் நிகழ்ந்த இத் திறப்பு விழாவின் பின்னர், சபை மண்டபத்தில் ஒரு பகிரங்கக் கூட்டம் அமைச்சர் நடேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் அமைச்சர் கூறியதாவது:

வளர்ந்து வரும் ஒரு கிராமத்துக்குத் தபால் நிலையம் இன்றியமையாதது. இப்போது என்னால் திறக்கப்பட்டுள்ள உப தபால் நிலையம் வளர்ச்சியுற்று வருமென நான் நம்புகின்றேன். இப் பகுதி மக்களின் பிரதிநிதியாக நான் பிரதிநிதிகள் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டபோது எனக்குத் தபால்— செய்திப் பகுதி அமைச்சர் பதவி கிடைக்குமென எண்ணியதில்லை, நான் அப் பகுதிக்கு அமைச்சராக இருக்கும் இச் சமயத்தில் தபால் கட்டணவகையில் உயர்வு ஏற்பட்டிருப்பது வருத்தத்துக்குரியது. ஆனால் நாட்டின் நிதி நிலைமையைச் சீராக்கும் வகையில் தபால் கட்டணங்களை உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. ஒரு நாட்டுக்கு எதிரிகளால் ஆபத்து ஏற்படுவது போலச் செல்வக் குறைவினாலும் ஆபத்து ஏற்படுவது இயல்பு. இந்த ஆபத்தினின்றும் நாட்டைக் காப்பாற்றுவதற்காகவே சில வரி விகிதங்களை உயர்த்த வேண்டியதாயிற்று. ஆனால் 'போஸ்ற் காட்' என்றும் போலவே 3 சதமாக இருந்துவரும். ஏழை மக்களின் நன்மையை உத்தேசித்தே 'போஸ்ற்காட்டி'ன் விலை உயர்த்தப்படவில்லை. ஒரு குடும்பத்திற் கஷ்டம் ஏற்பட்டுப் பின்னர்ச் செல்வநிலை அடைவது போலவே செல்வநிலை குன்றும் நாடும் பின்னர்ச் சீரடைவதுண்டு.

யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு சில கஷ்டம் ஏற்பட்டாலும் புகையிலை விஷயமாக டில்லிக்கு எனது தலைமையிற் சென்ற தூது நற்பயனளித்துள்ளது. புகையிலையை நம்பி வாழும் மக்களுக்கு இந்திய அரசினர் காட்டியுள்ள சலுகை நன்மை தந்துள்ளது. எனவே ஒரு விதத்தில் ஏற்படும் நலிவை மக்கள் வேறொரு விதத்திற் சமாளிக்க முடியுமென நம்புகின்றேன். நாட்டின் செல்வநிலை எப்போதும் குன்றுவதில்லை, விரைவில் எமது கஷ்டங்கள் நீங்கும் என எதிர்பார்க்கலாம்.

ஆசிரியர் திரு சி. தம்பிப்பிள்ளை அவர்கள் இத் தபால் நிலையத்தை நிறுவுவதற்கு உறுதுணை புரிந்தவர்களுக்கும் இதனைத் திறந்து வைத்த அமைச்சர் அவர்களுக்கும் சபையின் சார்பாக நன்றியை தெரிவித்து அக் கைங்கரியத்தை நிறைவேற்றுவதற்குச் சன்மார்க்க சபையினர் எடுத்துக்கொண்ட ஆர்வத்தைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். அத்தோடு அமைச்சர் அவர்கள் யாழ்ப்பாண மக்களுக்காகப் புதுடில்லிக்குத் தூதுசென்று மலையாளப் புகையிலை இறக்குமதி வரி சம்பந்தமாகச் செய்துவந்த அருஞ் சேவையையும் பாராட்டிப் பேசினர்.

அமைச்சர் அவர்கள் அன்று மாலை அவசரமாகக் கொழும்பு செல்லவேண்டியிருந்ததால் திரு மா. சின்னப்பு அவர்கள் தலைமையில் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பகுதித் தபாற் சேவைப் பிரதமாதிகாரி அவர்கள் பேசும்போது அக் கிராமம் ஒரு தபால் நிலையத்தை ஆதரிக்கக்கூடிய தன்மையில் இருக்கின்றதென்றும் குரும்பசிட்டி மக்களில் அனேகர் வெளியூர்களில் அரசாங்க உத்தியோகங்களிலும், வியாபாரத் துறைகளிலும் ஈடுபட்டிருப்பதால் புதிய உப தபால் நிலையம் அக் கிராமவாசிகளுக்குப் பெரும் வசதியை அளிக்கும் என்றும், தபால் நிலையத்தை மக்கள் எவ்வாறு ஆதரிக்க வேண்டும் என்பது பற்றியும் குறிப்பிட்டார்கள்.

பண்டிதர் வ, நடராஜா அவர்களும் இப்புதிய தபால் நிலயம், 'C' வகுப்பில் இருப்பதால் இக் கிராமவாசிகள் எதிர்பார்க்கிற அளவிற்கு உதவி புரியமாட்டாதெனவும் இக் கிராமம் ஒரு 'B' வகுப்புத் தபால் நிலையத்தை விட உயர்தரமான தபால் நிலையத்தையே ஆதரிக்கக் கூடிய நிலையிலிருக்கிறதென்பதையும் எடுத்துக் காட்டி அதனால் இப்போதிருக்கிற வகுப்பிலும் அடுத்தபடியான உயர் வகுப்பிலாவது ஏற்றிவைப்பதற்கு அதிகாரிகள் அனுசரணை புரிந்தால் அதுவே இப்போதைக்குப் போதுமானதெனவும் பேசினர். திருமதி துரைசிங்கம் சத்தியபாமா அவர்கள் புதிய தபால் நிலையத்தினால் இவ்வூர்ப் பெண்களுக்கு இதுவரையுமுள்ள தபாற் சேவைச் சங்கடங்களில் ஒரு பகுதி குறைந்துவிட்டதெனவும், இவ் உபதபால் நிலயம் 'B' வகுப்புக்குக் கூடிய சீக்கிரம் அமைக்கப்பட்டுத் தந்தி வசதிக்கான 'ரெலிபோன்' சேவையும் வழங்கப்பட்டால் அது இன்னும் அதிக நன்மையைப் புரியுமெனவும், இத் தபால் நிலையத்தின் தலைவியாய் ஒரு பெண்மணியை நியமித்தமைக்காக இவ்வூர்ப் பெண்மணிகள் சார்பில் நன்றி செலுத்துவதாகவும் கூறினர். ஈற்றில் இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள அவ்வூர் மக்களிடமிருந்து கிடைத்த நாற்பதிற் கதிகமான தபால், தந்தி வாழ்த்துச் செய்திகள் திரு. பி. எஸ். நடராசா அவர்களால் வாசிக்கப்பட்டன. நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

# பட்டினசபை கண்டனம்

## இன்பத் தமிழுக்கு இடமில்லையா?

கிழக்குத் தபால் : : தயாளன்

மட்டக்களப்பு, 4–8–53

இலங்கை அரசாங்கம் அரிசின் விலையை உயர்த்தியதையும், பள்ளிக்கூடப்பிள்ளைகளின் இலவச மத்தியான உணவை நிறுத்தியிருப்பதையும் மட்டக்களப்புப் பட்டினசபை வன்மையாக கண்டிக்கிறது எனத் திரு. எம். சிவநேசராசா சமர்ப்பித்த தீர்மானம் மட்டக்களப்பு நகரசபையில் நிறைவேறியது. பொதுநலப் பணியில் ஈடுபட்டு உழைக்கும் ஜனப் எம். கே. சுல்தான் மட்டக்களப்புப் பட்டின சபையின் உப தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டமையும் வரவேற்கத்தக்க செய்தியாகும்.

### நூல் நிலையம்


மட்டக்களப்புப் பொதுமக்களின் நூல் நிலையம், மட்டக்களப்புப் பட்டினசபையின் ஆதரவில் இருந்து வருகிறது. பட்டின சபையாரால் நூல்நிலையம் நல்லமுறையில் நடாத்தப்படுவது போற்றற்குரியது. நூல் நிலைய அறையில் இட நெருக்கடி இருந்து வருகிறது. மாணவர்களும் மற்றவர்களும் நின்றுகொண்டு வாசிக்கவேண்டியிருக்கிறது. விரைவில் மட்டக்களப்பு நகர மண்டபத்திற்கு நூல் நிலயம் மாற்றப்பட இருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. எவ்வளவு விரைவில் மாற்றப்படமுடியுமோ அவ்வளவு விரைவில் மாற்றி ஆவன செய்வது அவசியமாகும். 'தமிழுக்கு அமுதென்று பெயர்—அந்தத் தமிழ்—இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று தமிழ் முரசு கொட்டும் காளைகள் வாழும் மட்டக்களப்பில்—தமிழையே தாய்மொழியாகக் கொண்டமக்கள் நூல்நிலயத்தில் தாய்மொழி புறக்கணிக்கப்படுவது கண்டு தமிழ்மகன் தலைகுனிய வேண்டும். மக்கள் நூல்நிலையத்தில் தமிழ்நூல்களின் தொகை குறைவாக இருக்கிறது. தமிழ் நூல்களை நூல் நிலயத்திற் சேர்க்க முன்வந்துள்ள நூல்நிலைய நிருவாகக் குழுவினரைப் பாராட்டவேண்டும். ஆனால் நூல் நிலயத்தில் ஆங்கிலத்திற்குமட்டும் மதிப்புக் கொடுப்பதை நாம் கண்டிக்கிறோம், தமிழுக்கு மதிப்பில்லையா? விளம்பரப் பலகையில் விளம்பரங்கள் யாவும் ஆங்கில மயமாக இருப்பதன் காரணம் என்ன? தமிழ் மொழி அறிந்தோர் அறிவித்தல்களை அறியவேண்டிய அவசியம் இல்லை என்ற எண்ணமா?

இனியேனும் மட்டக்களப்பு நூல் நிலைய நிருவாகக் குழுவினர் இப்போதுள்ள குறைகளை நீக்கி நிறைவு செய்வர் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். விளம்பரப் பலகையில் ஆங்கிலத்தோடு சரிநிகர் சமானமாகத் தமிழ் மொழியும் விளங்குவது அவசியமாகும்.

எருவூர் கனிஷ்ட ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் வருடாந்த விளையாட்டுப் போட்டி விழா சென்ற 30–8–53-ல் நடைபெற்றது. வீடு அலங்கரிப்பில் நீலவீடும், கயிறு இழுத்தலில் மஞ்சள் வீடும் முதலிடம் பெற்றன. இந்த வருடத்திற்குரிய விளையாட்டுப் போட்டியில் முதலிடம் பெற்ற பச்சைவீட்டினர் கேடயம் பெற்றனர். இவ் விளையாட்டு விழாவுக்குத் தலைமை தாங்கிய பொத்துவில் பிரதிநிதியும் தலதாபண அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசியுமான ஜனப் எம். எம். இபுறுகீம் பேசுகையில் தகப்பனுக்குப் பணம் இல்லாதவிடத்துப் பிள்ளைகள் தகப்பனோடு ஒத்துழைக்கவேண்டும் என்றும், எதிர்க் கட்சியினர் செய்யும் போலிப் பிரசாரங்களுக்குச் செவி சாய்க்க வேண்டாமென்றும் கேட்டுக்கொண்டார்.

### கமக்காரர் கவலை

நான்கு மாதங்களுக்குப்பின் மட்டக்களப்புப்பகுதியில் மழை பெய்தது. கல்முனை, சம்மாந்துறை, எருவூர்ப் பகுதிக் கமக்காரர் மிகவும் கஷ்டமடைய நேரிட்டது. மட்டக்களப்புப் பகுதியில் அப்போது வேளாண்மை அறுவடை நடைபெற்றது. அறுவடைகாலத்தில் வயலில் நீர் இருந்தால் அறுபட்ட கதிர்களில் நெல் மடியாக ஆகிவிடும்; உதிர்ந்துவிடும்; விதைநெல்லும் பழுதடையும்.

★ இதெல்லாம் இப்படித்தான் அரசாங்கப் பத்திரிகைகள் கலாட்டா என்று எழுதும். எதிர்க் கட்சிப் பத்திரிகைகள் உரிமைப் போர் என்று கூறும்.

# உரிமைக் குரல்

லிங்கன்

சனிக்கிழமை காரியாலயத்துக்குச் செல்லும் போதே சிறிது நெஞ்சுத் தடிமல் பிடித்திருந்தது. என் மனமும் குழம்பிக் கொண்டிருந்தது. அங்கு சென்றவுடன், "இதோ உங்களுக்கு நான்கு கடிதங்கள்; நாற்பது சதங் கொடுங்கள்" என்று தபாற்காரன் கேட்டான். எனக்குக் கோபம் வந்தது. மறுபேச்சின்றி நாற்பது சதத்தைக் கொடுத்தேன்.

'நாட்டுப் புறங்கள்! தபாலுக்குப் பத்துச் சத முத்திரை ஒட்டவேண்டும் என்று இன்னும் தெரியவில்லை' என்றது என் மனம். கடிதங்களை உடைத்தேன். எல்லாம் ஒரே புராணந்தான். அரிசி 70 சதமாகி விட்டதாம். 'கூப்பன்' அரிசி வாங்கப் பணம் இல்லையாம். உடனே அனுப்பட்டாம். அம்மா எழுதியிருந்தார். மனைவி எழுதியிருந்தார்; முன்னர் நல்லாயிருந்து கெட்ட நண்பன் ஒருவன் உடனே பத்து ரூபாயாயினும் அனுப்பும்படி கேட்டிருந்தார். நான் சம்பளங்கூட எடுக்கவில்லை. அதற்குள்ளே ஒரே கரைச்சல். அப்பப்பா! போதும் போதும் என்றாய் விட்டது.

அன்று வந்திருந்த தினசரிப் பத்திரிகையை உடைத்துப் படித்தேன். முழுவதும் வரவு செலவுத் திட்டம் பற்றிய விபரங்களே. எல்லாம் வரி மயம். என் தலையோ சுற்றியது; சம்பளம் ஏதாவது உயர்வது பற்றிய செய்தி உண்டா என்று தடவினேன். ஒன்றும் இல்லை. சம்பளம் ஒன்றும் வெட்டமாட்டோம் என்று நிதி அமைச்சர் எங்கோ பேசிய பேச்சை ஒரு மூலையில் பிரசுரித்திருந்தார்கள்.

காரியாலயச் சேவகன் வந்தான். "ஐயா இன்று கடைசி நாள். 'கூப்பன்' அரிசி வாங்க வேண்டும். இன்று தவறினால் வாங்கவே முடியாது. ஒரு சதமும் இல்லை" என்றான். என்னிடம் எஞ்சியிருந்தது இரண்டு ரூபாய். வழமைபோல ஒரு ரூபாயை எடுத்துக் கொடுத்தேன். என்னையா அரிசி விலை தெரியாதா? எழுபது சதம். முன்னர் நாலு படிக்கு ஒரு ரூபாய் கடன் தந்தீர்கள். இப்போது ஐந்து படி கிடைக்கும். மூன்றரை ரூபாவாதல் கொடுங்கள் என்றான்" என்னிடம்.

"என்னிடம் உள்ளது இரண்டு ரூபாய்தான். இதோ வைத்துக்கொள். மீதியை எங்காவது கடன் வாங்கு" என்று கொடுத்தேன்.

காரியாலயத்தில் வேலையே ஓடவில்லை. ஒரு மணி அடித்ததும் வீட்டுக்குத் திரும்பினேன். மழை தூறிக்கொண்டிருந்தது. மழைகாலம் நெருங்கி விட்டது. இந்த மாதச் சம்பளத்தில் ஒரு குடை அவசியம் வாங்க வேண்டும். பிள்ளைகள் கூட நனைந்து கொண்டே பள்ளிக்கூடம் போகிறார்கள். மூத்தவருக்கு நல்ல தடிமல். இன்று பள்ளிக்கூடம் போகவிடாது மறித்து விட்டேன். குடையும் அவசியம் வாங்க வேண்டும். சம்பளம் எடுத்தவுடன் வழமையாக அனுப்புவதிலும் பார்க்க நாற்பதாலும் கூட அனுப்புங்கள் என மனைவியெழுதிய கடிதம் நினைவுக்கு வந்தது.

சாப்பாட்டுக்காகக் கடைக்குள் நுழைந்தேன். அங்கும் விலையேற்றத்தைப் பற்றியே பேச்சு. சங்கக்கடையில் வேலை செய்யும் சோமுவும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். "என்னண்ணை 25 சதத்திற்கே கூப்பன்' அரிசி வாங்க வழியில்லாதவர்களை 70 சதம் கொண்டுவா என்றால் என்ன செய்வார்கள்? சிலபேர் பத்திரிகையைப் படித்து விட்டு வந்து 86 சத அரிசியில் 5 கொத்துத் தரும்படி கேட்கிறார்கள். சங்கக் கடையின் முதல் ரூ. 5000 அதில் ரூ. 4000 க்குக் கூப்பன் அரிசி வாங்கி விற்றோம். இப்போது 4000 ரூபாவிற்கு வாங்கிய அரிசிக்கு 12,000 ரூபா வேண்டும். இந்தக் கஷ்டத்தில் 86 சத அரிசி எப்படி வாங்கி விற்க முடியும்" என்றார்.

சாப்பாட்டிலேயே மனம் செல்லவில்லை. எழுந்து வீட்டிற்கு வந்தேன். பத்திரிகையைப் படித்துக்கொண்டே படுத்து விட்டேன்.

யாரோ பலமாகக் கதவைத் தட்டினார்கள். திடீரென விழித்தெழுந்தேன் கண்டுகொண்டிருந்த கனவு கலைந்தது எழுந்து சென்று கதவைத் திறந்தேன். "மணி நீயா? வா இப்படி இரு" என்றேன்

"என்ன மிஸ்டர் பகலிலேயே நித்திரையா?"

உடம்பும் சரியில்லை மனமும் சரியில்லை. நித்திரையில் மறக்கலாம் என்றால் கனவாக நினைவுக்கு வருகிறது. ஒரு பெரிய நீதி மன்றம். எனக்கு எதிரே எமது நிதி அமைச்சர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். நான் அவர்மீதுபல குற்றங்களைச்சாட்டிக் காரசாரமாகப் பேசினேன். எனது ஒவ்வொரு பேச்சுக்கும் அங்கு கூடியிருந்த மக்கள் கைதட்டி ஆரவாரித்தார்கள். நீதிபதி கூட ஒன்றும் பேசாது கேட்டுக் கொண்டிருந்தார்.

"நீதிபதியின் தீர்ப்பைக் கேட்டிருப்பீர் நான் குழப்பி விட்டேன். இல்லையா?"

"மணி! என்ன இருந்தாலும் இருபத்தைந்து சத அரிசியை முப்பது அல்லது முப்பத்தைந்து சதமாக்கி யிருக்கலாம். எழுபது சதத்திற்குத் திடீரென உயர்த்தலாமா?"

"எங்களுடைய அரசாங்கம் எல்லா வற்றிலும் தாராள மனப்பான்மை கொண்டது. அரிசி மட்டுமா? தபால் ஐந்து சதத்திலிருந்து பத்துச் சதம். இருமடங்கு குறைப்பதிலும் அப்படித்தான்; சாராயம் 12 ரூபாயிலிருந்து 6 ரூபாய்.

"பார்த்தாயா! மனிதர் வாழ்வதற்கு அத்தியாவசியமான மூன்று பொருள்களில் முதன்மையானது உணவு. அதன் விலையை மூன்று மடங்காக உயர்த்துகிறார்கள். தேவையில்லாத சாராயத்தின் விலையை அரைவாசி யாக்குகிறார்கள்"

"இரண்டும் அழிவுக்குத்தான். உயர்ந்த விலைக்கு அரிசி வாங்க முடியாதவர்கள் பட்டினி கிடந்து சாகுங்கள். அல்லது மலிவாகச் சாரயம் குடித்து அடிபட்டுச் சாகுங்கள் என்பது தான் அரசாங்கத்தின் கொள்கை"

"அப்படி யல்ல சாராயத்தின் விலையைக் குறைத்ததன் மூலம் அதிக வருமானம் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் ஒரு போத்தல் குடித்தவன் அதே விலைக்கு இரு போத்தல் குடித்தால் என்ன நடக்கும்...?"

"அதுதான் நடந்து கொண்டே இருக்கே. கொலையும், விபத்தும் சென்ற ஆறுமாதங்களில் அதிகரித்துள்ளன" என்றான் மணி.

"அது தான் கிடக்கட்டும் வரியை உயர்த்துவதாயிருந்தால் அதற்குத் தக்க விளக்கமாகுதல் கொடுக்கிறார்களா? அதுவும் இல்லை. தபாலுக்கு ஐந்து சதம் உயர்த்துகிறார்கள். கொழும்பிற்குப் பிற இடங்களிலிருந்து காலை ஏழு மணிக்குப்போய்ச் சேர்ந்தாலும் பன்னிரண்டு அல்லது ஒரு மணிக்குத்தான் தபால் கொடுக்கிறார்கள். ரேடியோ உத்தரவுப் பத்திரத்தை பத்து ரூபாயிலிருந்து பதினைந்து ரூபாவாக உயர்த்தி விட்டனர். யாழ்ப்பாணத்திலோ அல்லது வேறு இடத்திலோ ஒரு புது நிலயம் திறக்கப் போகிறோம் என்று கூறுகிறார்களா? உள்ளது கொழும்பில் இரு வானொலி நிலயங்கள்; அதிலும் ஒன்று வியாபார விளம்பர நிலயம். மூன்றும் வகுப்புப் பிரயாணத்தைமுப்பத்துமூன்று சத வீதம் உயர்த்துகிறார்கள். (மைலுக்கு 3 சதத்திலிருந்து 4 சதம்) புதிய புகையிரத வீதி திறக்கப் போகிறார்களா? அல்லது அதிக வண்டிகள் ஓடப்போகிறார்களா? வழமையாக ஓடிய பல வண்டிகளையே நிறுத்தி விட்டார்கள். நேரத்திற்காவது வண்டிகள் ஓடுகின்றனவா? என்றேன்.

"வெளிநாட்டு வியாபாரத்திலிருந்து கிடைத்த வருமானங்கள் குறைந்து விட்டன. அதனால்தான் இப் புது வரிகள்"

அதற்கு வீண் செலவுகளையல்லவா கட்டுப்படுத்தவேண்டும் அதை விட்டு ஏழைக் குழந்தைகளின் வயிற்றில் கூடவா அடிக்கவேண்டும். பள்ளிக்கூடத்தில் படிக்கும் ஏழைப் பிள்ளைகளுக்குக் கிடைத்துவந்த மத்தியான உணவைக் கூட இல்லாமல் செய்யப் போகிறார்கள். இலங்கையின் படாடோபத்தை வெளிநாடுகளில் நாட்டுவதைக் கைவிடட்டும். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் ஆடம்பரப் பொருள்கட்கு அதிக வரி விதித்துக்கட்டுப் படுத்தட்டும். வெளிநாட்டு நிபுணர்களுக்குக் கோடிக் கணக்காகப்பணம் கொட்டி இங்கு நடத்திய திட்டங்களாலுங் கூட நல்ல பலன் இருபதாகத் தெரியவில்லை. 1947ல் நிதி அமைச்சர் ஆறுவருடத் திட்டம் பற்றி அழகாகப் பேசினார்; ஆறுவருடத்தின் பின்னர் எமக்கு வேண்டிய அரிசியை இங்கு விளைவிப்போம் என்றார். நடந்தது என்ன? இன்றும் எமக்கு வேண்டிய மூன்றில் இரண்டு பங்கு அரிசியையும் வெளிநாட்டிலிருந்து தானே எதிர்பார்க்கிறோம்.

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றதும் 1952ல் பொதுமக்களுக்கு நன்மை செய்வதாகக் காட்டிக் கொண்டார்கள். இப்போது அவையாவற்றையும்சேர்த்து ஒரேயடியாக ஏழைகளை வதைக்கிறார்கள். எல்லாம் அதிகாரம் தங்கள் கையில் என்றதுதான்.

வேறென்ன? இப்போது அரிசிவிலையை எழுபது சதமாக உயர்த்துவதன் மூலம் முன்னர் செலவு செய்த 16 கோடி ரூபாய்கிடைக்கும். இப்பணத்திற் பெரும் பகுதி ஏழைகளிடமிருந்து போகப் போகிறது. ஆடம்பரப் பொருட்களின் தீர்வையை உயர்த்துவதாலும், வருமான வரியை அதிகரிப்பதாலும் 4.1 கோடிரூபாய் அதிக வருமானம் எதிர்பார்க்கிறார்கள். 10,000 ரூபாய் வருட வருமானம் பெறுபவன் இவ்வளவு காலமும் 198 ரூபாய் வருமான வரி கொடுத்துவந்தான். இனிமேல் 200 ரூபாய் கொடுக்கவேண்டும். அவ்வளவுந்தான். இதற்குப் பெயர் பணக்காரரிடமிருந்து வசூலிக்கும் பட்ஜட்.

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

## விவசாயிகளுக்கு உதவி

### பட்டினத்திற் கார் நிற்க இடமில்லை

தென்மராட்சி : : நமது நிருபர்

சாவகச்சேரி, 28-7-53

பச்சிலைப்பள்ளி, கரைச்சிப் பகுதி மக்களின் சமய வளர்ச்சிக்குப் புத்துயிரளித்து வருவது திருநெறிக்கழகப் பிரசாரசபை. இச்சபை மூன்று ஆண்டுகளுக்குமுன் உதயமானது. சமயப் பிரசாரம், கூட்டுப் பிரார்த்தனை, சமய பாடப் பரீக்ஷை, பேச்சுப்போட்டிபோன்ற வகைகளிற் செயலாற்றுகின்றது. இவ்வாண்டு இச்சபை சமயபாடப் பரீஷையை நடத்தியுள்ளது. பல மாணவர்கள் சமய பாடப் பரீக்ஷைக்குத் தோற்றியுள்ளனர். கொழும்பு விவேகாநந்த சபையாரைப்பின்பற்றி உயர்ந்த முறையிற் சமய பாடப் பரீக்ஷை நடத்தியது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டு பரீக்ஷைக்குத் தோற்றிய மாணவர் 208. சித்தியடைந்தோர் 145. வருடாந்த மகாநாட்டில் பரிசுகளும் யோக்கியதா பத்திரங்களும் வழங்க இருப்பதாகவும், மாணவரிடையே ஒரு பேச்சுப் போட்டி நிகழ்த்த இருப்பதாகவும் தெரிய வருகிறது.

#### உணவு உற்பத்தி

கடந்த மகாயுத்தத்தின்போதுதான் நமது ஈழவளநாடு உணவுற்பத்தியிற் கூடிய கவனத்தைச் செலுத்தியது. அன்று தொடக்கம் உணவுற்பத்தியில் அரசாங்கம் மக்களுக்கு வேண்டிய உதவிகளை அளித்து ஊக்கப்படுத்தி வருகின்றது. சாவகச்சேரிப் பகுதியிலுள்ள பல கிராமங்கள் விவசாயத்தில் முன்னேறியுள்ளன. உணவுற்பத்தி இயக்கப் பகுதியினர் கோழிக்கு ஊசி மருந்தேற்றுதல், பச்சைக் கிடங்கு வெட்டுவித்தல், வெங்காயச் செய்கையைப் பெருப்பித்தல், ஒட்டுமாங்கன்று ஒட்டிக் கொடுத்தல், ஒட்டப் பயிற்றுதல், பயிர்களுக்கான கிருமிநாசனி, புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக்கல் இன்னோரன்ன உதவிகளை ஏழை விவசாயிகளுக்குத் தாராளமாகச் செய்துவருகின்றனர். உணவு மானியம் நிறுத்தப்பட்ட இக்கட்டான நிலையில் இத்தகைய உதவிகள் எதிர்காலத்தில் 'தன் கையே தனக்குதவி' என்ற குறிக்கோளுக்கு மக்களை யிட்டுச்செல்லும் என்பதே பலரது அபிப்பிராயம்.

#### இடமில்லை

சாவகச்சேரியிற் 'கார்'களின் எண்ணிக்கை கூடிவிட்டது. சந்தைக்கு அருகாமையிற் கண்டி வீதியில் 'கார்'கள் நிறுத்தப்படுவது தவிர்க்கப்படவேண்டும். எத்தனையோகார்கள் மணிக்கணக்காக வீதி ஓரத்தில் நிற்கின்றன. பொலிசார் இதுபற்றிக் கவனம் எடுத்தல் நன்று. பட்டினசங்கம் பராமுகமாய் இருப்பது வருந்தற்குரியது. கார்கள் நிற்பதற்கு ஓர் இடத்தை உடனடியாக ஆக்க வேண்டும். இல்லையேல். பிரயாணிகளுக்குப் பரம சங்கடமாக முடியும். பட்டின சங்கம் இதைப்பற்றிக் கிஞ்சித்தேனும் கவனியாதிருப்பது பொதுமக்களுக்குப் பெரும் நூதனமாக இருக்கிறது.

## 3000 குடும்பங்கள் கவலை

### சங்கு விற்பனையால் நேர்ந்த கதி

தீவுப்பகுதி : : நமது நிருபர்

புங்குடுதீவு 6-8-53

ஊர்காவற்றுறைத் துறைமுகத்திலுள்ள சங்குமாலில் ரூபா 50 லட்சம் பெறுமதியான சங்கு கையிருப்பிலிருக்கின்றதாகத் தெரியவருகின்றது. தீவுப்பகுதியைச் சேர்ந்த சங்கு குளிகாரரினால் சேகரிக்கப் பட்ட இச்சங்குகள் அரசினரின் தீர்வை உயர்வினால் விலைப்பட வில்லையாம். இதனால் மூவாயிரத்துக் கதிகமான சங்கு குளிக்கும் குடும்பங்களின் நிலை மிகவும் கவலைக்குள்ளாகியிருக்கின்றது. சங்கு விற்பனையை நம்பி வாழும் இத்தொழிலாளர்களின் குடும்பங்கள் பொருளாதாரத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சங்கு குளித் தொழிலுக்கு ஆதரவு கோரிப் பல விண்ணப்பங்கள் கடற்றொழில் மந்திரி அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனவாம். இது வரை எவ்வித பதிலையும் காணாத சங்கு குளிகாரர்களும் வியாபாரிகளும் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளனர். அரசினர் உடனடியாக இதற்கேற்ற நடவடிக்கைகளையெடுப்பார்களென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

#### கால்நடைகள் அழிவு

நெடுந்தீவில் தினந்தோறும் ஏராளமான ஆடு மாடுகள் இறக்கின்றன. அவற்றின் முக்கிய உணவான புல்லுக்கும், தண்ணீருக்கும் பஞ்சம் ஏற்பட்டதே இவ்வழிவுக்குக் காரணமாகும். "பசுத்தீவு" எனப் பலராலும் குறிப்பிடப்பட்ட இத்தீவு வனாந்திரம்போலக் காணப்படுகின்றது. தீவின் பல பாகங்களிலும் மாடாடுகள் இறந்து கிடக்கும் 'கோரக்'காட்சி மக்களைக் கவலைக்குள்ளாக்குகின்றது. இதையிட்டு விமோசனமளிக்கும்படி அரசாங்கத்திடம் மக்கள் கேட்டுக்கொள்ளவிருக்கின்றார்கள்.

#### குடியேற்றம்

நெடுந்தீவு மக்களின் பொருளாதாரம் மிகத்தாழ்ந்த நிலையிலிருக்கின்றது. வருடத்தில் ஒருசில மாதங்களுக்குத்தானும் அங்குள்ள வருவாய் போதாதாம். இத்தீவுமக்கள் கொடிய வரட்சியினால் பாதிக்கப்படுகின்றார்கள். நெற்செய்கையிற் பயனில்லை, அரசாங்கம் இத்தீவுமக்கட்குக் குடியேற்றத்திட்டத்தில் நிலம் ஒதுக்கித் தரும்படி கேட்டுக்கொள்கின்றார்கள். குடியேற்றத் திட்டத்தின்மூலம் மக்கள் தங்கள் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்ளுவார்களென நம்பப்படுகின்றது. அரசினர் உடனடியாகக்குடியேற்றத் திட்டங்களில் நிலம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென மக்கள் கேட்கின்றார்கள்.

#### குறிப்புகள்

வேலணைத் தீவிலுள்ள சின்ன மடுஎன அழைக்கப்படும் மாதா கோயில் திருநாள் இவ்வாரம் வெகு விமரிசையாக நடைபெற்றது. பெருந்தொகையான யாத்திரிகள் தொழுகையில் பங்குபற்றினார்கள். அனலை தீவு ஐயனார் ஆலயஉற்சவம் கடந்த 26ந் திகதி நிறை வெய்தியது. விழாக்களில் அன்ன தானம், பிரசங்கம், நாடகம், சதுர்க்கச்சேரி என்பனவும் இடம் பெற்றன.

# தமிழுக்கு நிலைக்களன்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவுக்குமேல் இலாபம் பெற்ருர். இப்படியே மூன்று முறை குத்தகை வாங்கி அதிக இலாபமடைந்தார். இங்ஙனம் இவர் முத்து வியாபாரம் செய்யும் காலத்தும் அதற்கு முன்னும் கூழங்கைத் தம்பிரானிடம் கல்வி கற்று வந்தார். இவர் கல்வி கற்கும் காலத்திலேயே இவருடன் கூடிக் கற்றவர்கள் தென்கோவை நெல்லைநாதபண்டிதரும், மாதகல் மயில்வாகனப் புலவருமாவார்கள். நிற்க.

இவர் முத்து வியாபாரத்திலே பெருஞ் செல்வ நிலையை அடைந்தமையை யறிந்து மகிழ்ந்து கூழங்கைத்தம்பிரான் ஒருநாள் இவரை நோக்கிப் "பரமபதியாகிய சிவபெருமானுடைய திருவருளினலேயே உனக்கு இச் செல்வம் வந்தது. ஆகையால் நீ இப்பொருளைக் கொண்டு ஒரு சிவாலயம் கட்டுவிப்பாயாக" என்ருர். அது கேட்ட செட்டியார் அவ்வாறே செய்வேனெனச் சம்மதித்து, தம்பிரான் குறித்த நிலத்தை வாங்கி 1787-ம் ஆண்டில் அத்திவாரமிட்டு அவ்வாலயத்தை மூன்று வருடங்களுக்குள்ளே கட்டி முடித்து 1790-ம் ஆண்டுக்குச் சமமான சாதாரண வருஷம் சித்திரை மாதம் பூர்வபட்ச சப்தமியோடு கூடிய புனர்பூச நட்சத்திர சுபதினத்தில் பிரதிஷ்டையும் செய்துவைத்தார். பின் அக்கோயிற்கு நித்திய நைமித்தியங்கள் கிரமமாக நடப்பதற்கான நிபந்தங்களு மமைத்து வைத்தார். வணிகர் குலப் பெரும் பிரபுவும் வள்ளலுமாய் விளங்கிய இவ் வைத்தியலிங்கச் செட்டியார் மீது செந்திக்கவி என்னும் இந்தியதேயப் புலவர் ஒருவர் ஒரு பிரபந்தம் பாடிக் கொண்டுவந்து இக் கோயில் வசந்த மண்டபத்திலே அரங்கேற்றிப் பரிசிலாகப் பெரும் பொருள் பெற்றுச் சென்றனர் என்றும், அரங்கேற்று வைபவத்திலே செட்டியாருடன் கூடக் கற்ற நெல்லைநாத பண்டிதர் தலைவராக இருந்தனர் எனறும் கூறுவர். இவருக்குப் பின் இக் கோயிலைப் பரிபாலித்து வந்தவர்கள் இவரது புத்திரர்களாகிய கோபாலச் செட்டியாரும் கந்தப்பச் செட்டியாருமாவார்கள். இவர்களுக்குப் பின இக் கோயிலைப் பரிபாலித்து வந்தவர்கள் இவர்கள் மரபினராய சுப்பராயச் செட்டியார், பொன்னுச்சாமிச் செட்டியார், வைத்தியலிங்கச் செட்டியார், சோமசுந்தரச்செட்டியார், துரையப்பச் செட்டியார், கந்தப்பச் செட்டியார் என்பவர்களாவர். இவர்களுக்குப் பின் பரிபாலித்து வந்தவர் பின்கூறிய கந்தப்பச் செட்டியாருடைய புதல்வரான பொன்னுச்சாமிச் செட்டியாராவர். அவருக்குப் பின் அவர் தம்பியாகிய வைத்தியலிங்கச் செட்டியார் 1939-ம் ஆண்டு தொடக்கம் மனேஜராக விருந்து பரிபாலித்து வந்தனர். இவருக்குப் பின் இவர் மனைவியார் இக் கோயிலைப் பரிபாலித்து வந்தனர். இப்பொழுது இக்கோயிலுக்குப் புனருத்தாரண கும்பாபிஷேகம செய்து மனேஜராக இருந்து பரிபாலித்து வருபவர் மேற்குறித்த வைத்தியலிங்கச் செட்டியாருடைய புதல்வர் கந்தப்பச் செட்டியாராவர். இவர் மனேஜராக வந்த பின் தமது கடமையைச் செவ்வனே நடாத்தி வருகின்றனர். இவருக்கு ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீசுவரப் பெருமான் திருவருள் பாலிப்பாராக. நிற்க.

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் சைவப் பிரசங்கம் செய்யத் தொடங்கிய காலத்தில் முதற் பிரசங்கம் இக் கோயில வசந்த மண்டபத்திலேயே செய்தார். நாவலரவர்களுக்குப் பின் இவர் மருகன் வித்துவ சிரோமணி பொன்னம்பலப் பிள்ளையவர்கள் இவ் வசந்த மண்டபத்திலே கந்தபுராணம், பெரியபுராணம், (திருத்தொண்டர் புராணம்) படித்துப் பதவுரைகள் கூறிப் பிரசங்கித்து வந்தார். நாவலர் பிரசங்கம் செய்த காலத்தும், பொன்னம்பலப் பிள்ளையவர்கள் புராணங்களைப் படித்துப் பொருள் சொல்லிப் பிரசங்கித்த காலத்திலும் பல்லாயிரக் கணக்கான சனங்கள் வந்து கேட்டுச் சமய உண்மைகளை அறிந்து மகிழ்ந்து செல்வார்கள். இக்காலமே யானும் பொன்னம்பலப்பிள்ளை அவர்களிடம் படித்த காலமாகும். இப்போது ஸி. எஸ். எஸ். மணி ஐயர் முதலியோர் சங்கீத கதாப் பிரசங்கம் செய்து வருகின்றனர். ஆகையால் சைவ சமயமும் தமிழும் வளர்தற்கு நிலைக்களனாக விளங்கியது இவ் வைத்தீசுவரன் கோயில் வசந்த மண்டபமென்று கூறல் மிகையாகாது. இவ் வைத்தீசுவரப் பெருமான் மீது கூழங்கைத்தம்பிரான் ஒரு தனிக்கவி பாடியிருக்கிருர். அதனைக் கீழே காட்டுதும்:—

நதியரவ மதியிதழி
    புரிசடை யவிழ்ந்துநட
    நண்ணுமா காச லிங்கம்
நால்வருக் குக்கலா
    னிழலினல் லுபதேசம்
    நவிலுற்ற மவுன லிங்கம்
நிதிபதித னன்புடைத்
    தோழனு யீசாக
    நிலைநின்ற வேட லிங்கம்
நிவாதமுறை யிருவர்க்
    கழற்கம்ப வடிவாகி
    நின்றெழுந் சோதி லிங்கம்
துதி துதிக் கையானை
    யன்போடும் போற்றிடுஞ்
    சுயம்பான வப்பு லிங்கம்
துய்யவுணர் வோரிதய
    கமலா லயத்திலெழு
    சுடர்போற் கொழுந்து லிங்கம்
மதிதவழ மதிலோடு
    கோபுரந் திகழ்வுறும்
வண்ணையெல் லையி னிறுத்தும்
    மாதங்க புரிதையல்
    பாகமிசை மீதமரும்
    வைத்தீச மாலிங்க மே.

இன்னும் கொச்சிக் கணேசையர் என்பவர் இவ்வாலயத்திலுள்ள தையல்நாயகி அம்மைமீது ஒரு ஊஞ்சலும், அராலியூர் விஸ்வநாத சாஸ்திரியார் வண்ணைக் குறவஞ்சி என்னும் நூலும், வட்டுக்கோட்டை கணபதி ஐயர் வண்ணை வைத்தியலிங்கக் குறவஞ்சி என்னும் நூலும், நாச்சிமார் கோவில் என்னும் கிராமத்தில் வாழ்ந்த சதாசிவ பண்டிதர் என்பவர் வண்ணை அந்தாதி, வண்ணைநகர் ஊஞ்சல் என்னும் இரு நூல்களும், திருவண்ணை வைத்தியலிங்கம் என்பவர் வண்ணை வைத்தீசர் ஒருதுறைக்கோவை என்னும் நூலும், வேலணையூர் பேரம்பலப் புலவர் வண்ணைச் சிலேடை வெண்பா என்னும் நூலும் இயற்றியுள்ளார்கள். இந்நூல்களை ஒருங்கு சேர்த்து அச்சிடுவது மிக நலமாகும். இதனைக் கோயில் மனேஜர் முதலியோர் கவனிப்பாராக,

# அரசினர் அறிக்கைகள்

## 1. பதில் வித்தியாதிபதியின் பரிபாலக அறிக்கை, 1951

சமீபத்தில் பதில் வித்தியாதிபதி திரு. ரீ. டீ. ஜயசூரிய அவர்களால்வெளியிடப்பட்ட இவ்வறிக்கையின்முதலாவது அத்தியாயத்தில் 1951-ம் ஆண்டிற் கல்விப் பகுதியிற் கையாளப்பெற்ற முக்கியமான மாற்றங்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. இலங்கையிற் பாடசாலைக்குச் செல்லும் வயதுள்ள 1,570,522 பிள்ளைகளில் 1,188,740 பிள்ளைகள் உண்மையாகப் பாடசாலைகளிற் கற்கின்றனர். தென்கிழக்கு ஆசியாவில் வேறு எந்நாட்டிலும் கல்வி கற்கும் பிள்ளைகளின்தொகை இந்த நூறுசத வீதத்துக்குச் சமமாகவில்லை.

மாகாணங்களுக்குப் பொறுப்பாயுள்ள வித்தியாதிகாரிகளின் அறிக்கைகளும் விபரமாக வெளியிடப்பட்டுள்ளன. வடமாகாணம் பற்றிய அறிக்கையில் இரண்டாம் மொழியாக ஆங்கிலங்கற்பித்தல் என்னும்பகுதியிற் பின்வரும் குறிப்புஉளது.

"தமிழ்ப் பாடசாலைகளிலும் சிங்களப்பாடசாலைகளிலும் ஆங்கிலம் கற்பிப்பவர்கள் (ஆங்கில) சி. பா. த. ப. பரீட்சையில் மாத்திரம் சித்தியெய்தியவர்களாயும் எவ்வித அனுபவமுமில்லாதவர்களாயு மிருப்பதால், இப்பாடசாலைகளிற் படிப்பிக்கப்படும் ஆங்கிலம் குறைந்த தரத்ததாகவே இருக்கின்றது. இவ்வாசிரியர்கள் கூடிய சம்பளமுடைய உத்தியோகங்களிற் சேர்வதற்காக அடிக்கடி பாடசாலைகளை விட்டு விலகுவதால், இவர்களுக்கு எத்தகைய பயிற்சியும் அளித்தல் கஷ்டமான காரியமாக விருக்கிறது. ஆங்கிலம் படிப்பித்தற்குப் பெண்களை நியமிக்கும் இடங்களில் இத்தகைய கஷ்டம் குறைவாகவே இருக்கிறது."

## 2. தொல்பொருள் ஆராய்ச்சி அறிக்கை, 1951

தொல்பொருள் ஆராய்ச்சிக்காக 1950—51-ம் வருடத்தில் ரூ. 1,103,233 ஒதுக்கப்பட்டது. தீவின் எல்லாப்பகுதிகளிலும் பரந்து கிடக்கும் தொல்பொருட் பாதுகாப்பிடங்களையும் அவைகளிலுள்ள ஞாபகசின்னங்களையும் நிர்வகிப்பது இப்பகுதியின் முக்கிய வேலைகளில் ஒன்றாகும். சமுதாயத்தின் கலாசாரத்தில் இச் சின்னங்களுக்குள்ள முக்கியத்துவம் புறக்கணிக்கப்படக் கூடியதல்ல...... தொல்பொருட் பாதுகாப்பிடங்கள் முக்கிய தேசியச் செல்வங்களாகக் கருதப்பட வேண்டியதோடு இவைகளைப் பாதுகாப்பதில் அரசாங்கமும், பொதுமக்களும் பெரிதும் சிரத்தை காட்ட வேண்டுமெனத் தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதி அதிகாரி திரு. எஸ். பரணவித்தான தமது அறிக்கையிற் குறிப்பிட்டிருக்கின்ருர். மகியங்கணை: தாதுகர்ப்பத்திலுள்ள அசுவினித் தேவ உருவம், விஷ்ணுவின் சித்திரம், மிகிந்தலை: தாதுகர்ப்பத்தின் வர்ணச் சித்திரங்கள், சிகிரியா: போதிசத்துவ உருவங்க ளமைந்த சலவைக் கல் என்பனவற்றின் புகைப்படங்களும் வேறுபடங்களும் அறிக்கையிற் சேர்க்கப்பட்டுள்ளன.

## 3. சமூகசேவை அதிபரின் ஆண்டுப் பரிபாலன அறிக்கை, 1952

சமூகசேவை அதிபர் திரு. ஆர். எல். திருச்செல்வம் அவர்களால் இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. சமூகஉதவிச்சேவைகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

1. பொதுசன உதவி (மாதாந்த உதவிப்பணங்கள்;
2. தற்செயல் நிவாரணம்!
3. காசரோகிகளுக்கும் அவர்களைச்சார்ந்து வாழ்வோருக்கும் பண உதவி கொடுத்தல்;
4. பயிர் விளையாமை, வெள்ளம், புயல் முதலிய அசாதாரண காரணங்களால் உண்டாகும் பரந்த நஷ்டத்திற்கு நிவாரணம் அளித்தல். தீ, புயல், தற்செயல் விபத்து முதலிய தேவாதீனச் செயல்களால் கஷ்டப்படும் மீன்பிடிகாரருக்குத் தனிப்பட்ட நிவாரணம் அளித்தலும் அவற்றுடன் சேரும்;
5. வெள்ளத்தினல் கஷ்டப்படுபவர்களை மறுபடி குடியிருத்துதல்;
6. தாமே முன்வரும் இயக்கங்களும் ஸ்தல அதிகாரிகளும் தர்ம முன்னேற்ற ஸ்தாபனங்களையும், அனுதை மடங்களையும், வயோதிபர் இல்லங்களையும், பாலர் பாதுகாப்பு நிலையங்களையும் நடாத்துவதற்காக உதவி நன்கொடைகள் கொடுத்தல்;
7. வயோதிபர் அரசாங்க இல்லங்கள்;
8. தேக ஆற்றல் இழந்தவர்களை முன்னைச் சுகநிலைக்குக் கொண்டுவருதலும் மறுபடி குடியிருத்துதலும், தேக ஆற்றல் இழந்து சேவையிலிருந்து விடுபட்ட போர்வீரர்களை மறுபடி குடியிருத்துதற்காக நன்கொடைகள் கொடுத்தலும்;
9. செவிடு குருடுகளுக்கான பாதுகாப்புள்ளவேலைஸ்தலங்கள்
10. தாமத வீடும் அலைந்து திரிவோர் இல்லமும்.

இத்துறைகளில் அரசாங்கம் நாட்டுக்குச் செய்துவரும் விபரங்கள் இதிற் சுருக்கமாக வெளியிடப்பட்டுள்ளன.

## உரிமைக் குரல்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியாக எவ்வளவோ சொல்லலாம். இலண்டனிலும் பார்க்க இப்போதே அத்தியாவசியமான உணவுப் பொருட்களின் விலை இங்கு அதிகமாம். அப்படியானல் இனிமேல்:—

எல்லாம் பொறுமையுடன் இருந்துபார்க்க வேண்டியதுதான்.

எங்களைப்போல் அகிம்சாவாதிகள், பொறுமைசாலிகள் யார் இருக்கிருர்கள். கல்கத்தாவில் டிராம் கட்டணத்தை ஒரு பைசா அதிகமாக்கியதற்கு எவ்வளவு போராட்டம். கொழும்பிலே டிராமுக்கு ஐந்து சதம் கூட்டினர்கள். புகையிரதக்கட்டணம் 33 சதவீதம் கூடுகிறது. மற்றும் அரிசி, மின்சாரம், தபால், தந்தி யாவும் கூடுகின்றன. ஒன்றையும் காணேம் என்றேன்.


என்? வரவு செலவுத்திட்டத்தின் போது பாராளுமன்றக் கட்டடத்தருகே கலாட்டா நடந்ததே. பத்திரிகையில் படிக்கவில்லையா? என்ருன்மணி.

இதெல்லாம் இப்படித்தான் அரசாங்கப் பத்திரிகைகள் கலாட்டா என்று எழுதும். எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் உரிமைப் போர் என்று கூறும்.

நாங்களெல்லோரும் சும்மா பேசிப்பேசிக் காலங் கடத்துகிருேம். சாதாரண மக்கள் ஆத்திரத்தோடு அடுத்த தேர்தல் வரட்டும் என்று சொல்லுவார்கள். பின்னர் மறந்து போவார்கள். நேரமாகிறது நான்போய் வரட்டுமா?

சரி, மணி! காலையில் சந்திப்போம். எனக்கு உடல் நலம் சரியில்லை. நான் வெளியே கிளம்பப்போவதில்லை. இப்போதிருக்கும் சூழ்நிலையில் என்னென்ன நடக்குமோ தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம் என்று சொல்லி மணியை வழி அனுப்பினேன்.


பத்திரமாக தயார் செய்த பால்



சில அபாயங்களை விலக்கலாம்; மற்றவைகளை நேரும் பொழுது சமாளிக்கவேண்டும். அபாயங்களை எண்ணிப் பின்னடையாமல் காரியங்களைச் செய்தல் சிலசமயங்களில் இயற்கையானதே. வேறு எந்த அபாயங்களைப்பற்றி நீங்கள் சிந்திக்காவிடினும் பால் விஷயத்தில் கவலையீனம் கூடாது.

சுத்தமான, அபாயமில்லாத பால் எல்லோருக்கும் ஒரு வரப்பிரசாதம் போன்றது. கண்டிப்பாகப் பால் சாப்பிட வேண்டியதிருக்கும் பொழுதோ சுத்தமான நல்ல பால் வெகு அத்தியாவசியமானது. எப்பொழுதும் உங்கள் வீட்டில் உபயோகிக்க மில்க்மேய்ட் (நோனுமார்க்) பாலையே தெரிவு செய்யுங்கள். இந்தப் பால் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் அருந்த ஏற்றவாறு பத்திரமாகத் தயாரிக்கப் பெற்றுள்ளது.





மில்க்மேய்ட்
நோனுமார்க்
இனிப்புள்ளகட்டிப்
பால்

# பாலர் பகுதி

**அன்பான மருமக்களே,**

வணக்கம். நீங்கள் ஆடு, மாடு, குதிரை போன்ற பல மிருகங்களைப் பார்த்து வருகின்றீர்கள். ஆனால் கங்காரு என்ற மிருகத்தைப் பாட புத்தகங்களிலுள்ள படங்களிலும் 'சினிமா'விலுந்தான் பார்க்கின்றீர்கள். இம் மிருகம் அவுஸ்திரேலியாவில் உள்ளது. இதன் பின்னங் கால்கள் முன்னங் கால்களை விட நீளமாகவுள்ளது. அதன் வயிற்றில் ஒரு பை போன்ற உறை இருக்கின்றது. கங்காரு அதன் குட்டிகளை இப்பைக்குள் வைத்துக் கொள்ளும். ஆபத்து வேளைகளிற் குட்டிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இப்பை உதவியாக இருக்கின்றது, இம்மிருகத்தை வேறு இடங்களிற் காணமுடியாது. ஆனால் பெரிய மிருகசாலைகளிற் காணலாம்.



பிள்ளைகளே, உங்களில் எத்தனை பேர் கொழும்பிலுள்ள மிருக சாலைக்குச் சென்றிருக்கின்றீர்கள்? அங்கு கங்காருவைக் கண்டீர்களா? வேறு என்ன மிருகங்கள் உங்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது. மாமாவுக்கு எழுதினால் நல்லது அல்லவா? **மிருக சாலையில் ஒருநாள்** என்னும் விஷயம் பற்றி மிருக சாலைக்குச் சென்றவர்கள் கட்டுரை எழுதி அனுப்பலாம். நல்ல கட்டுரை ஒன்றை இப்பகுதியில் வெளியிடுவேன். கேசரிமாமா

## தமிழ் நாட்டில் பெண்கள்

க. இராமநாதன் (650)

கலைஞர்களும், கவிஞர்களும், அறிஞர்களும் பலர் தோன்றி வாழுநாடு தமிழ்நாடு. ஆண்கள் மட்டுமன்று, பெண்களும் கவிஞர்களாய் விளங்கிய பெருமை தமிழ் நாடொன்றுக்கே உரியதாம்! அரசோச்சிய சக்கரவர்த்தினிகள் பலரைத் தந்த இங்கிலாந்துக்கோ ஆங்கில மொழிக்கோ தானும் அப்பெருமை கிடைக்கவில்லை. உலக மக்களுக்கும் சமூகத்துக்கும் வாழும் நெறிகளை, அறங்களை, வகுத்தவர்கள் பெரும்பாலும் ஆண்களே. அவ்வாறாகிய ஒரு நீதிநெறியை, அறவழியை, உலகனைத்துக்கும் பொருந்தத்தக்கவகையில் பெண்மணி ஒருத்தி வகுத்துக் கூறினாளெனில் அது தமிழ்மொழியிற்றான்; ஒளவைதான் கூறியிருக்கிறாள் என்பதை எவரும் அறிவர். ஒளவை பாடல்கள் எளியன, இனியன, உறுதிப்பொருள் உடையன. பாலர் முதற் பேரறிஞர்வரை எவரும் படிக்கத் தக்கன. ஆழமான கருத்துடையன, "ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை" முதலியன ஒளவையார் அருளிச் செய்த நீதிநூல்கள். ஒளவை என்ற பெயரோடு பல பெண் புலவர்கள் இருந்திருக்கலாமென ஆராய்ச்சியாளர் கூறுவர்.

இன்னும் பாரி மகளிரான அங்கவை சங்கவை என்போரும் கோப்பெருங் பெண்டு என்னும் அரசி ஒருத்தியும் கவிபாடிய புலமையாளராக இருந்தனர். அரசகுலத்தினரன்றிச் செல்வநிலை, நாகரிகங்களிற் குறைந்தகுறவர் எயினர் குயவர் முதலிய சாதிகளிலும் பல பெண் புலவர்கள் இருந்து விளங்கினர். இவர் குறமகள் இளவெயினி, பேய்மகள் இளவெயினி, வெண்ணிக் குயத்தியார், நச்செள்ளையார் முதற் பலராவர்.

தேவார திருவாசக காலத்திலும் காரைக்காலம்மையார், ஆண்டாள் முதலிய கவிப் பெருமாட்டிகள் இருந்தனர். அவ்விருவரும் தமிழுலகில் இருகண்ணனையார். சைவஉலகில் காரைக்காலம்மையும் வைஷ்ணவ உலகில் ஆண்டாளும் அழியாத புகழ்பெற்ற கவியணிகளாவர். இன்றுபோல் அரசினர் நடாத்தும் பாடசாலைகளும் அவரிடம் வேதனம்பெறும் ஆசிரியர்களும் கட்டாயக் கல்வி இலவசக்கல்வி முதலிய இணைகளும் அச்சிட்ட புஸ்தகங்கள் தாமும் கிடையாது, ஏட்டில் எழுதிப் படிக்கும் நாகரிகம் வளராத பண்டைக் காலத்திலே தமிழகத்திலே இருந்த புலவர்களது எண்ணிக்கையைப் பார்க்கும்போது நாற்றுக்கு ஐந்துவீதம் பெண் புலவர்களும் இருந்திருக்கின்ற உண்மை விளங்கும். இங்ஙனம் பெண்கள் கல்வியறிவிற் சிறந்து வாழ்ந்த தமிழ்நாட்டிற் பெண்கள் இன்று எந்நிலையிலிருக்கிறார்கள். 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே' என்று பாரதியார் பாடியது முக்காலத்திலும் ஒத்து நிகழ்ந்த நிகழும் செய்தியே என்று நாமறியலாம். இங்ஙனம் பாரதி நினைவூட்டியபின்னும் மகளிர் அந்நிலைக்கு விரைந்து வாராதிருப்பது வருந்தத்தக்கதே. எனினும் வழிகாட்டிகளாக நின்று இராசேஸ்வரி அம்மையார்போன்ற பல எழுத்தாளர்களும் பேராசிரியைகளும் பெண்களை முன்னணிக்குக் கொண்டுவருவார்களாக. 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்றது பொய்யாமொழியாய்த் தமிழகத்திற் பொலியுமாக.

### வாலாஜாபாத் இந்துமத பாடசாலை

சென்ற 28-7-53-ல் வாலாஜாபாத இந்துமத பாடசாலையையும் அதன் சார்பிலுள்ள மாணவர் இல்லம், தொழிற்சாலை முதலியவைகளையும் சென்னை அரசாங்கத்தின் ஆரம்பக் கல்வி ஆலோசகர் ஸ்ரீ ஜி. இராமச்சந்திரன் அவர்களும், மதுரைப் பெரும் பகுதிப் பரிசோதகர் ஸ்ரீ இ. இரகுநாதன் பி. ஏ., எல். டி., டி. டி., அவர்களும், செங்கற்பட்டு ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீமதி சரசுவதி துரைசாமி எம். ஏ., எம். எஸ். ஸி., பி. டி., அவர்களும், செங்கற்பட்டு மாவட்டத்தின் எல்லா உப பரிசோதகர்களும் பார்வையிட்டார்கள். அப்பொழுது உயர்திரு. ஆலோசகர் பாடசாலையின் சிறப்புத வளர்ச்சியைப் பாராட்டியிருந்தார்.

## மாமா பதில்

க. இராமநாதன் (650)

நாம் விரத மிருக்குங் காலங்களில் பட்டினியாயிருக்க நேரிடுகிறது. வெறு வயிற்றில் வாயு (காற்று) விழுந்துவிடுகிறது. உபவாசம் முடிந்து உண்ணப் புகுங்கால் காற்றை ஓட்டுவதற்குக் கனவழிகளை நம் முன்னோர் கையாண்டனர். இன்றும் நாம் வீட்டில் எண்ணெய் தேய்த்து முழுகியவுடன் அம்மா, எங்களுக்கு வயிற்றில் வாயு குடிபுகாவண்ணம், உள்ளி ரசமோ மிளகு ரசமோ உட்கொள்ளச் செய்வதுவழக்கமாயிருக்கிறது

சிராத்தத்தில் தானத்துக்கு வரிக்கப்பட்டோர் உண்ணப் புகுமுன் என்ளுப்பாகு உண்ணவேண்டுமென்பது சாத்திர விதியாம். ஏகாதசி விரதமனுஷ்டிப்போர் தீர்த்தங் துளசிகள் உட்கொள்வதோடு, அகத்திக் கீரையும் ஆக்கியுண்பர். மகாத்மா காந்தியடிகள் தமது நெடுநாளைய விரத முடிவில் முதன் முதலாகக் கொழுஞ்சிப் பழச் சாறு (தோடை) பருகினர்.

இவைபோலவே ஆடி அமாவாசை விரதமனுஷ்டிப்போர் ஆதொண்டையெனப்பெயரிய காத்தோட்டி (காற்றோட்டி)க் காயை அருந்துவர். 'காற்றோட்டி' யென்ற பெயரின் கருத்தே அதனை யுண்ணுங் காரணத்தை நன்கு விளக்குகின்றது. நம் முன்னோர், விரதானுஷ்டானமுடையோர் பின்பு வயிற்று வலியால் வருந்தாதிருக்கச் சுகாதாரத்தையும் பிணைத்துவைத்தமைக்குக் காத்தோட்டிக்காய்தின்னுதல் அரியதோர்எடுத்துக்காட்டாகும். காத்தோட்டிக்காய் ஒரு கிருமிநாசனியுமாகும். 'ஆதொண்டைக்குப்...பல பிணியும்போம்.'

### ஈழத்துக் கலாசாரப் பரம்பரை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னும், இவ்விரு சாதியினரும் பொதுவாக மிக ஒற்றுமையுடன் நீண்டகாலமாக வாழ்ந்து வந்தனராவர். தமிழ்ப் போர் வீரர்களே பொல்லநருவாவிலுள்ள தந்த தாது ஆலயத்தைப் பாதுகாத்து வந்ததாகப் பொல்லநருவாவிலுள்ள சிலாசனமொன்றிற் காணப்படுகின்றது.

**தமிழர் பண்பாடு**

தமிழரின் பண்பாடுகளை வட இலங்கையில் நன்கு கண்டறியலாம். வட இலங்கையைத் தமிழரே அரசுபுரிந்து வந்தவர்கள். எனவே அங்கு தமிழரின் கலாசாரம் நன்கு வேரூன்றியுளது. எனவே இந்தியாவிலிருந்து இரு கலாசாரங்கள் இலங்கைக்குள் புகுந்தன. வட இந்தியாவிலிருந்து புத்த பண்பாடும் தென்னிந்தியாவிலிருந்து தமிழ்ப் பண்பாடும் இலங்கை மக்களின் வாழ்க்கையைப் பன்னூற்றாண்டுகளாக வளம்படுத்தி வந்தன. எனவே இந்தக் கலாசாரத் தொடர்பு இலங்கை இந்தியா ஆகிய இருநாடுகட்கிடையில் என்றும் நிலைபெற்றேயாகும். எனவே இவ்விரு நாடுகளும் ஒற்றுமையாகவும் நெருங்கிய தொடர்புடையனவாகவும் வாழ்ந்தே தீரவேண்டும.

### —கவனிக்கவும்—

ஈழகேசரி பாலர் பகுதியில் 6 வயதுக்கு மேற்பட்டவர்களாயும், 19 வயதுக் குட்பட்டவர்களாயும் உள்ள சகலரும் அங்கத்தவர்களாகச்சேரலாம். அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் இங்கு வெளியாகியுள்ள விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டும்.

### வடபகுதித் துறைமுகம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வருடங்களாகக் கூறியும் இதுவரை எவ்வித நடபடிக்கையு மெடுக்கப்படவில்லையென்று சுட்டிக்காட்டுகின்றார். இக் குறையை நீடிக்க விடாது தடுப்பது அரசினரின் முக்கிய கடமையாகும். ஆயின் ஊர்காவற்றுறையே அத்துறைமுகமாக அமைய வேண்டுமென்பது பொருந்தா நியாயமாகும். காங்கேசன் துறைக்கும் கோடிக்கரைக்கும் பண்டுதொட்டே போக்குவரவு இருந்துவந்திருக்கிறது காங்கேசன் துறையே சிவஸ்தலங்கள் நிறைந்த சோழநாட்டுக்கு அதிசமீபமாகவுள்ளது. யாழ்ப்பாணத் துறைகளுக்கெல்லாம் மத்தியிலுள்ளது. புகைவண்டி நிலையம், விமான நிலையங்களோடுபொருந்தியது. இத்துடன் இலங்கைக்கு வருவாயைத் தருவதும் ஏற்றுமதி செய்து விற்கப்படவேண்டியதுமான சீமெந்து காங்கேசன் துறையிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது. இவற்றிற்கெல்லாம் மேலாகப் புராதனப் பெருமைவாய்ந்த ஆலயங்களிரண்டையும் தீர்த்தமொன்றையும் தனக்கு வெகு சமீபத்திற்கொண்டுள்ளது. சுகஸ்தானமாகவும் திகழ்வது. இவ்வித வசதிகளோடு கூடிய காங்கேசன்துறை வடபகுதிக்கு முக்கிய துறைமுகமாக அமைய வேண்டுமென்பது காய்தலுவத்தலின்றி நோக்குவார்க்கு இனிது புலனாகும். இவ்விஷயத்தில் அரசினர் முயற்சிக்குமுட்டுக்கட்டைபோடுவது நம்மவரென்பது தேற்றம்.

ஸி. பி. எஸ்.
யாழ்ப்பாணம்


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம்**

**ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.**

**பங்குப் பணம் கட்டுமுறை:**

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகளை எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாறு ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:**

க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகபாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[4920]


### பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை

**செய்கை மூலங் கல்வி உபகரணக் காட்சி**

இம்மாதம் 13ந் தேதி தொடக்கம் 15ந் தேதி வரையும் உபகரணக் காட்சியும் "செய்கை மூலம் கல்வி" என்றோர் மகாநாடும் இங்கு நடைபெறும். கல்விப் பகுதி நிரந்தரக் காரியதரிசி திரு. ஆர். எச் விக்கிரமசிங்கி அவர்கள் 13ந் தேதி காலை 9 மணிக்குப் பொருட் காட்சியையும் மகாநாட்டையும் திறந்து வைப்பார்கள் எனக் கல்லூரி அதிபர் தெரிவிக்கின்றார்.

### விண்ணப்பப் பத்திரம்

ஈழகேசரி — பாலர் பகுதி

கேசரி மாமா, ஈழகேசரி, சுன்னாகம்.

அன்புள்ள மாமா,

தயவுகூர்ந்து என்னை ஈழகேசரி-பாலர் பகுதியிற் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

முழுப்பெயர்: ........................................

விலாசம்: ........................................

........................................

பிறந்த திகதி ........................................

........................................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

நீங்கள் இளமைப் பருவத்தை அடைய
**சி. எம். சாமி, தங்க பஸ்பம்**
உபயோகியுங்கள்
தேக புஷ்டியைத் தருவதில் இதற்கு நிகர் வேறு இல்லை. உடம்பு பலத்தையும் இரத்த விருத்தியையும் பசியையும் உண்டாக்குகிறது. இல்வாழ்வில் இன்பத்தைத் தருகிறது. நீரிழிவு, பவுத்திரம், இடுப்புவலி, வாய்வு முதலிய வியாதிகளை குணமாக்குகிறது.
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25-00.
ஏஜண்டு: S. பொன்னுச்சாமிப்பிள்ளை
133, தம்கொட்டைத்தெரு, பலாங்கொடை.
தலைமை வைத்தியசாலை:
மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி, S. I.

T'Phone No 805

சந்தா விபரம்
ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி சதம் 10. காசு 10

Registered at the G. P. O. as a Newspaper
24TH YEAR OF PUBLICATION
EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
Largest Circulation in Ceylon, India, Burma & Malaya Union
Founder: N. PONNIAH

Vol. 24 | Chunnakam, Sunday, Aug. 9 1953 | No 6

# அமைதியாக எதிர்ப்போம்!

## அரிசி விலையும் அலை ஓசையும்

வடமராட்சி : : நமது நிருபர்

பருத்தித்துறை 5-8-53
அரசாங்கத்தின் சில செயல்கள், எதிர்க் கட்சிகளுக்கு நல்ல வாய்ப்பை அளித்திருக்கின்றன. சென்ற திங்கட்கிழமை சக்கோட்டைக் கடற்கரையிலே கொம்மியூனிஸ்ட் கட்சியின் பிரசங்கக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. முன்னொருபோதும் கூட்டம் நடைபெறாத இடமாக இருந்தும், பல்லாயிரக் கணக்கான சனங்கள் கூடியிருந்தனர். அரிசி விலை உயர்வு, 'சனங்களைத் தட்டியெழுப்பி யிருக்கிறது' என்பதைத்தான், அது எடுத்துக் காட்டியது! 'அரிசி விலையைப் பழையபடி குறைக்க வேண்டும்' 'எங்கள் பிரதிநிதி வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்க வேண்டும்'' என்ற தீர்மானங்கள் எழுந்த பொழுது மக்கள் ஆரவாரம் அளவுகடந்து போயிற்று. தோழர்கள் வயித்தியலிங்கம் நியாயவதி ஜெயசிங்கம் ஆதியோர் முக்கிய பேச்சாளர்களாய் இருந்தனர்.

''இம்மாதம் 12-ம் தேதி, எல்லாரும், அரசாங்கத்துக்கு எங்கள் எதிர்ப்பைக் காட்ட வேண்டும். ஆனால், அப்பாவிகளான பொலீஸ்காரரோடு அடிபிடிக்குப் போகவேண்டாம். அமைதியாக இருப்போம்; வீடுகளில் கறுப்புக்கொடி ஏற்றுவோம்; ஒருநாள் தொழிலை விடுவோம்; பிள்ளைகளைப் பாடசாலை போகாமல் வீட்டில் மறிப்போம். அதனால் தேசத்தின் எதிர்ப்பை அரசாங்கம் உணரட்டும்! அந்த ஒருநாள், இது தான் நாங்கள் செய்ய வேண்டிய கடமை'' என வேண்டுகோள் விடுத்தனர், சனங்கள் அப்படிச் செய்வதாகக் கைதட்டி வாக்குறுதி அளித்தனர்.

**மதுவிலக்குப் பிரசாரம்**

சென்ற 30-7-53 வியாழக்கிழமை புலோலியிலே திரு கே. ஆழ்வாப்பிள்ளை ஆசிரியர் தலைமையில் மதுவிலக்குக் கூட்டம் நடைபெற்றது. திரு. மு இராமலிங்கம் அவர்களும் இன்னும் பலரும் பேசினர். 'அரசினர் சாராய விலையைக் குறைத்திராவிடில் இன்னும் எவ்வளவோ குடி குறைந்திருக்கும்' எனப் பலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர். திரு. இராசலிங்கம், குடியையும் தீண்டாமையையும் சட்டமூலம் நீக்க வேண்டுமெனக் கூறினர்.

**இலவச வாசிகசாலை**

அரசாங்க உதவியுடன் சனசமூக நிலையங்கள் எல்லா ஊர்களிலும் இன்று இயங்குகின்றன. ஆனால், அதற்குப் பல வருஷங்களுக்கு முன்னரே, யாழ்ப்பாணத்திலே, இலவச வாசிகசாலைகளுக்கெல்லாம் முன்மாதிரியாக, மிகச் சிறப்புடன் நடந்து வந்தது வல்வெட்டித்துறை இலவச வாசிகசாலை. அதற்கு, வல்வை மகாஜனங்களின் உதவியால், சந்தியிலே ஒரு பெரிய கட்டிடம் கட்டப்பட்டது. பல வருஷங்களாக இழுபட்டுவந்த அம் முயற்சி மூன்று மாசங்களின் முன் நிறைவேறியது. கட்டிடம் தொடங்கிய நாள்முதல் பல ஊழல்களாலும் பொதுக்கூட்டம் நடைபெறவில்லை. 27-7-53 திடீரெனப் பொதுக்கூட்டம் கூடியது. ஸ்ரீ. சி. அழகேஸ்வரராசா தலைவராகவும், ஆசிரியர்கள் ஸ்ரீ பாக்கியநாதன் ஸ்ரீ பொன்னம்பலம் இணைக்காரியதரிசிகளாகவும், ஸ்ரீ இரத்தினம் தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

# கலை விழாக் காட்சிகள்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் காட்சி கண்ணுக்கினியது.

பெருமாள் கோயில் மூர்த்திக்குரிய அரிய ஆபரணங்களை அனைவரும் பார்த்து அகமகிழ வேண்டியது.

தமிழ் மக்கள் அணிந்து வந்த ஆபரணங்கள் ஒவ்வொன்றும் தனிச்சிறப்பு வாய்ந்தது. சிங்சமுகக்காப்பு, சம்புநாதவளையல், கங்கணம், கொலிசு, மாங்காய்மாலை, குவளைக்கடுக்கன், கௌரிசங்கரம், நெல்லிக்காய்க் கொலிசு, பாதசரம் என்பன இப்போது அருகிவருகின்றன. எனவே, தமிழர் கலைத்திறனும் குன்றுவதாயிற்று. இந்த ஆபரணங்களில் தமிழினத்தின் கலை வண்ணம் படிந்திருப்பதைப் பார்க்கவேண்டுமானால் சித்திரசாலை அதற்குச் சிறந்த சந்தர்ப்பம் அளிக்கின்றது.

அத்துடன், சாந்துச்சிமிழ், குங்குமப் பரணி, பித்தளையில் வெள்ளிவேலை செய்யப்பட்ட தட்டம், உருக்கினுற் சமைத்த முகம் பார்க்கும் கண்ணாடி என்பன சித்திரசாலையிலுள்ள அரிய கலைப்பொருள்களாகும்.

இலங்கையிற் பௌத்த மதம் வளர்ச்சியுற்று வருவது போலவே பௌத்தர்களின் கலைகளும் வளர்ச்சியுற்று வருகின்றன. சித்திர சாலையிற் பௌத்த கலைச்சித்திரங்களும் ஓர் அம்சமாகும்: புத்த ஓவியச் சித்திரங்களும், சிங்கள அலங்காரச் சித்திரங்களும், புத்தாது பிறப்பு வரலாற்றைக் கூறும் குடிசைச் சித்திரங்களும் குறிப்பிடத் தக்கன. ஜாதகக் கதைகள் உள்ள ஏட்டுப்பிரதி தங்க வேலைப்பாடுகள் அமைந்த அட்டைகளுடன் உள்ளது. இதன் பெறுமதி ரூ. 50,000 ஆகும். இராஜசிங்க மன்னன் காலத்து ஈட்டியும் காட்சிக்கு வைக்கப் பெற்றுள்ளது.

பொலநறுவை, திருக்கோணேசுவரத் திருவடிவங்கள் உள்ளத்தை அள்ளுகின்றன.

சென்னையிலுள்ள அரசினர் சித்திர கலாசாலையிற் பயிற்சிபெற்ற திரு. ஏ. எஸ். பாலசுந்தரம் அவர்களின் வண்ணச் சித்திரங்கள் உயர்தரமானவை. இவையும் சித்திரசாலையை அலங்கரிக்கின்றன.

சிற்ப சித்திர ஓவியச் சிறப்புகளுடனும் கலை நலஞ்செறிந்த காட்சிப் பொருள்களுடனும் திருவடிவங்களுடனும் விளங்கும் சித்திர சாலையிற் கலைவாணி திருநடனஞ் செய்கின்றாள். இக் காட்சியை ஏற்படுத்திய கலைஞர் திரு. க. நவரத்தினம் அவர்களின் கலைபபணி வாழ்க!

### கலைக் களஞ்சியம்

வைத்தீசுவர வித்தியாலயக் கலைவிழாவை முன்னிட்டு வெளியிடப் பெற்றுள்ள **கலை விழா மலர்** மணியனைய கட்டுரைகளுடனும், படங்களுடனும் கவர்ச்சிகரமாக அமைந்துள்ளது. வித்தியாலய வரலாற்றினைத் திரு. தி. முத்துக்குமாரு அவர்கள் எழுதி இருக்கின்றார். யாழ்ப்பாணத்துக் கலைநுட்பக் கைத்தொழில்கள் மலர்ச்சியுற வேண்டுமென்பதை அருமையான புகைப் படங்களுடன் திரு. க. நவரத்தினம் அவர்கள் எழுதியிருக்கின்றார்.

வித்தியாலயத்தை நிறுவிய பெரியார் திரு. த. நாகமுத்து அவர்களைப்பற்றி அவருடைய புதல்வன் திரு. நா. மாணிக்க இடைக்காடர் எழுதியுள்ளார். கிரிமலைக் கேணியைச் சீர்பெற அமைப்பதற்கான யோசனைகளைத் திரு. ஸி. சூரியகுமாரன் தமது கட்டுரையிற் கூறியுள்ளார். வித்தியாலய அதிபர் ச. அம்பிகைபாகன் அவர்கள் வித்தியாலய வளர்ச்சியைப் பற்றியும் அதன் அவசியதேவைகளைப்பற்றியும் விபரித்துள்ளார். வித்தியாலய நிகழ்ச்சிகளைப்பற்றிய புகைப்படங்கள் நன்கு அமைந்துள்ளன.

வித்துவ சிரோமணி சி. கணேசையர் அவர்கள் வண்ணை வைத்தீசுவரன் கோயில் வரலாற்றினைச் சுவைததும்ப இனிய தமிழில் எழுதி உதவியுள்ளார்கள். திருமதி இராஜேஸ்வரி கயிலாயநாதன், வித்துவான் பொ. கனகசபை ஆகியோரின் வாழ்த்துப் பாக்களும் உள. வெண்ணெய் போன்ற தாளில் முத்துப் போன்ற எழுத்துக்களிற் கவின்பெற அமைந்துள்ள இக் **கலை விழா மலர்** ஒரு கலைக் களஞ்சியமாகும். இம்மலர் கலை விழா நிர்வாக சபையினரால் வெளியிடப் பெற்றது. சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினரால் அழகுற அச்சிடப் பெற்றுள்ளது.

❀ ❀

**பாவைக் கூத்து**

விழா மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பெற்ற மேடையிற் சென்ற புதன்கிழமை பாவைக்கூத்து நடைபெற்றது. ஞானசௌந்தரி நாடகமே பாவைக் கூத்தாக அமைந்திருந்தது.

இனமும் ஒளிமயத்திற் கைப் பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

# வலிகாமம் வடக்கு தமிழாசிரியர் சங்கம்

**நடன நாடக விழா.**

இவ்விழா 1-8-53 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் காளிங்கன் படமாளிகையில் நடைபெற்றது. தெரிவுசெய்தெடுக்கப்பட்ட இருபதுக்கு மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து நடனம், நாடகம், பாட்டு, கும்மி, காவடி ஆகிய விடயங்கள் போட்டியில் கலந்துகொண்டன. முன்னைய ஆண்டுகளிலும் பார்க்க நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தேறின. வருத்தலை விளான் அ.மி. பாடசாலையில் இருந்துவந்த காவடியும் குளமங்கால் றோ.க.பாடசாலையில் இருந்துவந்த பிச்சைக்காரி என்ற நாடகமும் மிகமிகத்திறமையாகக் காட்சி அளித்தன. இப்பகுதித் தமிழாசிரிய சங்கத்தின் சிறந்தமுயற்சிகளையும் வளர்ச்சியினையும் கண்டு இப்பகுதியிலுள்ள பெரியோர் இச்சங்கத்திற்கு அனேக நன்கொடைகள் அளித்துள்ளார்கள். சேர் பொன்னம்பலம், இராமநாதன், ஈழகேசரி அதிபர் திரு. நா. பொன்னையா, சுன்னாகம் திரு. அ. குமாரசாமிப்புலவர், மல்லாகம் திரு. இ. நமசிவாயம் என்போரின் ஞாபகார்த்தமாக அவர்களின் உரிமையாளர்களால் விலையுயர்ந்த வெள்ளிக் கேடயங்கள் சங்கத்திற்குப் பரிசிற் பொருள்களாக அளிக்கப்பட்டன. இவை ஆண்டுதோறும் இவ்விழாவிற் காட்சியளித்து விழாவைச்சிறப்பித்துக் கொண்டிருப்பனவாகும். இவற்றை உதவிய பெரியார்களுக்குச் சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது. இக்கேடயங்கள் முதலாவது பரிசு பெற்ற நான்குபாடசாலைகளுக்குக் கொடுக்கப்பட்டன. 2ம், 3ம் இடம்பெற்ற பாடசாலைகளுக்கு வெள்ளிக்கிண்ணங்களும் புஸ்தகங்களும் பரிசில்களாக வழங்கப்பட்டன. இவ்விழாவிற்கு வடமாகாணவித்தியாதிகாரி திரு. கே. கிருஷ்ணபிள்ளை அவர்கள் தலைமை தாங்கினர். இப்பகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதியும் தபால்—செய்தி அமைச்சருமாகிய கௌரவ. சு. நடேசன் அவர்களால் பரிசில்கள் வழங்கப் பெற்றன. மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை ஆசிரியர் திரு. க. சுந்தரம் அவர்களும், வடமாகாண இப்பகுதி வித்தியாதரிசி திரு. ஏ. அருணையா அவர்களும் தனதிகாரி திரு. வை. கந்தையா அவர்களும் இவ்விழாவின் விசேட பொறுப்பாளர்களாக அமர்ந்து திறம்பட நடாத்தி முடித்தனர். ஈற்றில் சங்கக் காரியதரிசியினால் அனைவர்க்கும் நன்றி கூறப்பட்டது. வெற்றிபெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு.

பாட்டு: 1ம் பரிசில் அளவெட்டி ஞானோதய வித்தியாசாலை. 2ம் பரிசில் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை. 3ம் பரிசில் ஏழாலை தெற்கு அ. மி. பாடசாலை.

நடனம்: 1ம்பரிசில் இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை, 2ம் பரிசில் மல்லாகம், அ. மி. வித்தியாசாலை. 3ம் பரிசில் அளவெட்டி சதானந்தவித்தியாசாலை.

கும்மி: காவடி: 1ம் பரிசில் வருத்தலைவிழான் அ. மி. வித்தியாசாலை. 2ம் பரிசில் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை. 3ம் பரிசில் ஏழாலை தெற்கு அ. மி. வித்தியாசாலை.

நாடகம்: 1ம் பரிசில் இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை. 2ம் பரிசில் குளமங்கால் R.C. வித்தியாசாலை. 3ம் பரிசில் அளவெட்டி அருணாசலவித்தியாசாலை. வித்தியாதிகாரி அவர்களும் அமைச்சரவர்களும் இப்பகுதி ஆசிரியசங்கத்தினைப்பெரிதும்பாராட்டினர்

**வெங்காயம் செய்த வேலை**

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

**அரிசிப் பேச்சு**

அரிசி மானயம் நிறுத்தப்பட்டது பற்றிப் பொது மக்களிடத்திற் காணப்படும் மாறுபட்ட நிலைமையைத் தெளிவு படுத்திச் சமாதானமடையச்செய்வதில்வடமாகாண அதிபர் தீவிரகவனம்செலுத்தி வருகிறார். அவர் ஆங்காங்கு பொதுமக்களை ஒன்று கூட்டி மானயம் நிறுத்தியது பற்றி விரித்துரைப்பார். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலே சென்ற வியாழக்கிழமை இக் கூட்டம் நடத்துவதற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**மாதவிடாய் நின்றுபோனதா?**
**நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்)** Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688
எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 10-0-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 13-0-0 (தபால் செலவு தனி)
**கர்ப்பத்தடை** **நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)** Government Registered No. 266
12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். பில்ஸ் விலை ரூ. 15-0-0 (தபால் செலவு தனி)
சிலோன் ஏஜண்ட்: New Colombo Medical Stores, 82, Main St., Colombo-11
Mfgrs: SEENU & CO., POST BOX. 1638, MADRAS-1.
பிராஞ்ச்: 134, SERANGOON ROAD, சிங்கப்பூர்.

இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா—சுபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1953-ம் ஆண்டு ஓகஸ்ட்மீ 9-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது